# தென்றல்

ஆசிரியர்:
கண்ணதாசன்

கே.எஸ்.ராமு

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, மாசி 15 (27-2-'60). சனிக்கிழமை | இதழ் 37

# திராவிடம் கிடையாதாம்!

கடந்த புதன் கிழமையன்று (17-2-60) இரவு 8-30 மணிக்கு வானொலியில் ஓர் அனைத்திந்திய நிகழ்ச்சி ஆங்கிலத்தில் நடைபெற்றது. இருபது நிமிடங்களே நடைபெற்ற அக்கலவைக் கருத்தரங்கில் அறுவர் பங்கேற்றனர். அவ்வாறு பெருமக்களும் ஆங்கிலம், வரலாறு, புதைபொருள் ஆய்வு ஆகிய பல்வேறு துறைகளில் ஈடுபட்டிருப்பவர்கள். அரங்கின் தலைவராக ஐதராபாத் ஆங்கிலக் கழகத்தின் இயக்குநர் இருந்தார். அவர்கள் உரையாடியதன் கருப் பொருள் (The Contribution of the south to the heritage of India) "தென்னகம்,குறிப்பாகத் திராவிடம்இந்தியப் பாரம்பரியத்திற்கு ஆற்றிய நலன்கள்" என்பதாகும். தமிழ் மாநிலத்தின் சார்பாகச் சென்னைப் பேராசிரியர் எம். எஸ். சீனிவாசன் என்பவர் கலந்துகொண்டார் என்று அறிவிக்கப்பட்டது

அதில் உரை நிகழ்த்திய பலரும் திராவிடம் என்பதாகத் தனியொரு இனம் இன்று நடைமுறையில் இல்லை. இன்று கலைகளும் பண்பாடும திராவிடம் அல்லது ஆரியம் என்ற அடிப்படைகளில் பிரித்துப் பேசப்படுகின்றன. இதில் ஆதாரம் எதுவும் இல்லை. ஆந்திரர்கள், மலையாளிகள் தமிழர்கள, கருநாடகத்தினர் எல்லாம் தத்தமக்கென்று தனித் தனிச் சிறப்பியல்புகளோடு இசை, சித்திரம், திருமண முறைகள், நாட்டியம், இலக்கியம், பழக்க வழக்கம் எல்லாம் வளர்த்து வந்திருக்கிறார்கள். கதகளி, பரதநாட்டியம் என்று தனித்துத் தனித்துச் சொல்லப்படுகின்றன. ஆந்திரர் பாராட்டும் தியாகராசர் கீர்த்தனைகளை வெகுவாகத் தமிழர்கள் பாராட்டுவதில்லை. திராவிடம் எனப்படும் நான்கு வகுப்பினரும் வெவ்வேறு வகைப்பட்ட முறைகளைச் சார்ந்தவர்களாய்க் காணப்படுகிறார்கள். இடத்தைப் பொறுத்து அதன் சாயலைத் தென்னக அல்லது திராவிட மரபுடையதாகச் சொல்லலாம். ஏன்? இன்னும்கூட அவர்கள் தத்தமது எல்லைகளுக்காகப் போராட்டம் நடத்திக்கொள்ளுகிறார்கள் என்பதையும் பார்க்கலாம்.

மேலும் சிவன், காளி, போன்ற கடவுளரும் இன்னும் பல கிராமியக் கடவுளரும் திராவிடத்தாரின் தோன்றலே ஆகும் என்று சொல்லப்படுகிறது. மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகத்தைப் பார்த்து இதை உறுதிப்படுத்த முனைகிறார்கள். உண்மையில் மொகன்சதாரோ நாகரிகம் தோன்றிய காலத்தில் ஆரிய மதமும் நன்கு பொலிவோடு இருந்து அது தனதுஆதிக்கத்தைச்செலுத்தியிருந்த நிலைகள் புலனாகின்றன. வட நாட்டில் பழக்கத்திலிருந்த சிவன், காளி ஆகியோரைத் தான் அன்று மொகன் சதாரோ மக்கள் மேற்கொண்டிருக்க வேண்டும். காரணம் இன்றும் மராட்டியத்திலும், வங்காளத்திலும் இக்கடவுள்களைப் பலர் நீண்ட காலமாக வழிபட்டு வருவதை அறியலாம்.

ஒவ்வொரு கலையும் அந்தந்தக் குறுகலான நாட்டில் தோன்றிய நுண்பொருள் வளர்ச்சியாகும். இதன்

## திட்டமிடப்பட்ட சதி?

கருத்தாக்கம், முறைப்பாடுகள் எல்லாம் அந்தந்தப் பகுதியினைச் சார்ந்து நாளடைவில் அருகிலுள்ளநாடுகளின் தொடர்பால் அங்கும் செல்வாக்குப் பெறுகின்றன. அடிப்படையில் இதை "லோகா சாரம்" [Local] என்று சொல்லுவார்கள். அக்கலை உள்நாட்டிற்குப் போகப் பொதுவாய்மக்களது மேன்மைக்கும் இன்பியலுக்கும தொண்டாற்றும் நோக்கமுடையதால் "சாத்திரசாரம" எனப்படும் உலகப் பொதுமையின் (universal) தன்மையையும் பெறுகிறது. கலைகள் வளர்ந்திருக்கின்றன. கலைகள் கால வெள்ளத்தில் பிறிதொரு பண்பாட்டைச் சார்ந்து மெருகேற்றிப் பின்அதனோடு பெரிதும் ஒன்றி விடுவதும் இயல்பே என்பது அக்கருத்தரங்கின்பாணியாக இருந்தது. குழுவின் தலைவர் இறுதியில் இடையிடையே சொன்ன சொற்றொடர்களைக் கூர்ந்து நோக்கினால் அவ்வரங்கின் ஆய்வும் முடிவும் எத்தகையன என்பதைத் தெரியலாம். அக்கூற்றின் சொறகள் என்ன?

'திராவிடன் என்றோ திராவிடர் எனறோ ஒரு தனியினம் இன்று கிடையாது. குறிப்பிட்டுச் சொல்லுமளவில் திராவிடக்கலை என்றோ திராவிடப் பண்பென்றோ ஒன்று. (கன்னடம், தெலுங்கு, மலையால மொழி நிலங்களில) சித்திரம் சிறபம் கட்டடக் கலை, இசை என்று எதை எடுத்துக் கொண்டாலும் அவைத் தனித்தனியே தோன்றியனவாகும தம் எல்லையில்! திராவிடர், ஆரியர் என்பதாக இன்று அடிப்படையான ஒரு பிரிவுக்குக் கூட இடமில்லை. இந்திய அமைப்பு என்பது ஆரியமும திராவிடமும் கலந்த ஒரு கலவைக் காட்சியே! எந்த வழியிலும் அவற்றைப் பிரிக்கமுடியாது!" -இப்படியெல்லாம் அவரது முடிவுரையின் கருத்தோட்டங்கள் இருந்தன.


மேற்கண்டவாறு ஓர் கருத்தரங்கை ஏற்பாடு செயதிருப்பது பாராட்டத்தகுந்ததாகும் ஆனால் அவ்வரங்கில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருப்பவர்களில் ஆராய்ச்சி வேறுபாடில்லை. ஒரு முகமான எண்ணங்களைக் கொண்டவர்களை வைத்து நடத்தப்பட்டிருப்பதில் ஆராய்ச்சி உண்மைகளைக்கண்டறிய இயலாது. தமிழ்நாட்டின் திறத்தையும், பண்பையும் விளக்கவல்ல அறிஞர் ஓரிருவரைச் சேர்த்தேனும் அமைக்கபபட்டிருந்தால் நடு நிலைமைக்குரியதாக அரங்கின்அமைப்பை எடுத்துக்கொள்ளலாம். இதன் ஆய்வுகள உணர்ச்சிக்கு முதலிடமும் வரலாற்றிற்கு இறுதியிடமும் அளிக்கும் பான்மையிலிருக்கின்றன. ஆரியம், திராவிடம் என்ற சொற்களை இரண்டும் இனத்தாலும், மொழியாலும் வேறு வேறு என்று வின்ஸ்லோ, சிலேட்டர், போப், வினசன்ட் சுமித், ஈராசு அடிகள் போன்றவர்கள் எல்லாம் பல சான்றுகளைக் காட்டி விளக்கி உறுதிபபடுத்தி விட்டார்கள். அண்மைக் காலத்திலிருந்த பேராசிரியர் சொக்கலிங்கம் என்பவர் தமது வரலாற்று ஆய்வு நூல் ஒன்றில் (The origin of the Indo-European races) இந்திய-ஐரோப்பிய இனங்களின் அடித்தள உருவாக்கத்தை வேறு என்பதைத் தனித்துக் காட்டியுள்ளார். சிவன், காளி, முருகன் முதலான கடவுளர்களைப்பற்றியும் அந்நூலில பேராசிரியர் சொக்கலிங்கம் நன்கு அறுதியிட்டுத் திராவிடரின் வணக்கததிற்குரியவையாக அவற்றை குறிப்பிடுகிறார். சிவம், சைவம், லிங்கம், அமபு, வேல், முருகன் வேலன, எல்லாம் தமிழ்ச்சார்புடையன வென்று மறைந்த அறிஞர் மறைமலை அடிகளார் தமது 'பழந் தமிழ்க் கொள்கையே சைவ சமயம்" என்ற நூலிலும் "வேளாளர் நாகரிகம்" என்ற நூலிலும் பல நூறு ஆதாரங்களை இலக்கியத்திலிருந்தும், வடமொழிக் காவியங்களிலிருந்தும், அகழ்வாராய்ச்சிப் பொருளகளின் துணைகொண்டும், தாமே வடமொழி, தென் மொழி, ஆங்கிலம் ஆய மொழிகளிற் தேர்ந்திருப்பதைத் துணைக்கொண்டும் எழுதினார்கள். மொழியின் வடிவம், ஒலிக்குறிப்பு, இதைப் பேசுகின்ற மக்களின் உடலமைபபு, உளப்பான்மை, உணவு வகை, வாழ்வு முறைகள் எல்லாம் தெரிந்தாய்ந்து சொல்லப்பட்ட உண்மைகளே அவை. வெறும் புனைந்துரைகள் அல்ல. யாருடைய புகழுரைக்கும் விரும்பி அடிகளார் தமது நூல்களை ஒருகாலும் யாத்தாரில்லை. சமயப்பற்றில் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால அவரது ஆய்வுரைகளில் யாருக்கும் கருதது வேறுபாடு இருக்க நியாயமில்லை. இன்னும் மேலே சென்றால், சீன யாத்திரிகர் யுவான் சுவாங, வேனிசு நகர யாத்ரிகா மார்கோ போலா, மனு, நாரதா, யாஞ்ஞவல்க்யர், தொல்காப்பியா, போனற பலரின் நூல்களைப் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்தாலும் இரு இனங்களின் தனித்தன்மைகளைக காணக் கூடும்.

இன்று சில கலைகளை வடக்கேயுள்ளவர்கள் சிந்துவெளித் திராவிடரிடமிருந்து அறிந்து விரிவாககியுள்ளனர். அதனால வேறு சூழ்நிலைகளின் படிவங்கள காணப் படலாம.

— 10-ம் பக்கம் —

# நடுநிலை மறந்தனர் வானொலியினர்!

# சேவாசிரமம்



நூல் இணைத்துத் தைப்போர்.

— முன் இதழ்த் தொடர்ச்சி —

கொடையுள்ளம் படைத்த அவர்கள், அணுகியவரது கடமை உணர்ச்சியையும் தொண்டுள்ளத்தையும் வியந்து பாராட்டிப் பொருள்தர முன்வந்தனர். அவர்கள் முயற்சியால் இன்னும் பலரும் பொருள்தரும் பட்டியலில் கூடினர். எண்ணியபடி எதிர்பார்த்த பொருளுதவி கிட்டியமையால், ஒரு ஆரம்பப்பள்ளி, மல்லேசுவரம் 5 ம் பெருஞ்சாலையில் துவங்கப்பட்டது. அப்பள்ளிக் கட்டிடம் வாடகைக் கட்டிடமாகக் கொள்ளப்பட்டது. "தூய தொண்டுக்கே பிறந்தோம்" என நம்பிய அவ்விருவரோடு கூடிய நல்லூழியர்களின் இலவச அறிவுப்பணி, அக்கட்டிடத்தில் நீண்டு நின்றது; நீளும். அக்கல்வி, தொழிலாளர்கட்கு அறிவின் அவசியத்தையும்-சிந்தனையின் எழுச்சியையும் தூண்டக் கருவியாக இருக்க வேண்டும் எனத் தலைமையாக நின்ற அவ்விருவரும் விரும்பினர்.

தொழிலாளர்கட்குப் பயில நேரம் ஏது? பகல் முழுமையும் பஞ்சாலைத் தொழிலல்லவா? இரவு நேரந்தானே ஓய்வுள்ள நேரம்! தொழிலாளர்கட்கு ஓய்வுள்ள நேரத்தைத்தானே பள்ளிக்கூடம்பயன்படுத்திக்கொள்ள வேண்டும்! அதனுல் இராப்பள்ளி நடத்துவதாகத் துணியபபட்டுத் துவங்கப்பட்டது. இரவுக் காலங்களிலாவது தொழிலாளர்கள் கல்வி கற்று வளமடைய மாட்டார்களா என்ற ஆர்வம் உந்தப் பெற, அவ்விரு பொறுப்பாளர்களும் செயல் பட்டார்கள். படிக்க வரும் தொழிலாளர்கள் எதிர்காலத்தில் நல்ல பட்டதாரிகளாக வெளி வர வேண்டும் என்பது எண்ணி அப்பணி செய்யப்பட்டதல்லதாயினும், எழுத்துக்களையாவது உணர்ந்து, பொருள் தெரிந்துகொள்ளக்கூடிய அடிப்படை அறிவையாவது அவர்கள் பெற்ருல் போதும் எனக் கருதிப் பணி புரிந்தனர். தங்களது ஆர்வத்தை எல்லாம் பொழிந்து, அன்பு முழுவதையும் நீராகப் பாய்ச்சி, தொண்டு ஒன்றையே நல்ல எருவாகக் கொண்டு, "அறிவு-வளர்ச்சி" என்னும் அறுவடையைக் காணத் தலைவர்களிருவரும் முயன்றனர்.

கல்வி மணம் கதிர்விடத் துவங்கியது. தொழிலாளர்கள் கொஞ்சம் கொஞ்சமாகப் பள்ளிக்கு வரலாயினர். தொழிலாள முதியவர்கள் கூட்டம் அருந் தமிழைக் கற்கத் தொடங்கியது. அறிவுக்கண்கள் அவர்கள் அகவாழ்வில் திறந்து விடப் பட்டன. முன்னேறும் தொழிலாளப் பெரியவர்களைக் காணும் பொழுதிலெல்லாம் பின்தங்கிய பலருக்கு வளர்ச்சி வழியில் புத்தார்வமும் - புதுணர்ச்சியும் எழத் தொடங்கின. இக்கல்விப் பயிற்சி நல்ல பயனைத் தருகிறது எனத் துவங்கியவர்கள் நம்பினர். சுமார் 200-க்கு மேற்பட்ட பெரியவர்கள் திருவிழாவில் பங்கு பெறுவதுபோல், அவ்விராப் பள்ளிக் கல்வியில் பங்குபெறக் கூடி விட்டனர்.

தொடங்கிய ஆறு திங்கள்கட்குள் அப்பள்ளி பெற்ற வளர்ச்சி பெரிதல்லவா! பள்ளிக்கு வரவேண்டும், படிக்க வேண்டும் என்ற எண்ணத்தையே எழச் செய்வது பெரிய திருப்பணியல்லவா! வளர்ந்தவர்கள் மட்டும் கற்ருல் போதுமா? வளரும் பருவத்தினர்க்கு வளர்கல்வியைத் தருவது எதிர்கால நாட்டைக் காக்கும் கடன்களுள் ஒன்றல்லவா! அதனுல் வளர்ந்தவர்கள் கல்வியில் செலுத்திய அக்கறைபோல், வளர்பவர் கல்வியிலும் அக்கறை செலுத்த நாட்டம் கொண்டனர். அதன் பலன், பகற்பள்ளி எழுந்தது. கல்வியின் விழுப்பத்தையும் மேன்மையையும், இராப்பொழுதில் புகட்டியமையால், உணர்ச்சியும் அறிவும் நிரம்ப வளரப்பெற்ற முதியவர்கள் தமது மக்கட் செல்வங்களையும் மறவாது பகற்பள்ளிக்கு அனுப்பினர்.



சேவாசிரமப் பொதுச்செயலாளர் கோ. சதானந்தம்.

சிறுவர்கட்குத் தக்க வண்ணம் அடிப்படைக் கல்வியும், பெரியவர்கட்குத் தக்க வண்ணம் அறிவுடன் பொருந்திய அரசியல் கல்வியும் வழங்கப்பட்டன. இவ்வுயரிய பணியால் நல்ல தமிழை உச்சரிக்க மறந்திருந்த தொழிலாளர் நாவிலெல்லாம் நற்றமிழ் தவழத் தொடங்கியது. வெற்றுச் சொற்களையும் - விணுரைகளையும் பயின்று விண்வம்பு தேடிக் கிடந்த தொழிலாளர் - இன்ருே - நாவெல்லாம் பயனுள்ள சொற்களையும், பொருள் நிறைந்த கருத்தையும், சொல்லவும் எண்ணவும் தொடங்கின.

அனைவரையும் ஒன்றுபடுத்தும் வகையில் அருந்தமிழின் தோத்திர இலக்கியப் பாடல்கள் முதலில் தொழிலாளர் மனம் பண்பட நிற்க, போதனைப் பாடல்களாகப் போதிக்கப்பட்டன. நல்ல சொற்களை நா பயில்வது சிறப்பல்லவா! பழகு தமிழின் சொல்லருமை புலப்படவும் அவ்விலக்கியங்கள் பயன்படும் என்ற கருத்திலும் பயிற்றுவிக்கப்பட்டன: நெஞ்சொருமைக்கு அப்பாடல்கள் துணை நின்றதுபோல், சொல்லருமை உணர்த்துவதற்கும் பயன்பட்டது. மொழி அருமை உணர்ந்தால் போதுமா! நாடல்லவா கட்டிக் காக்கப்படவேண்டும்! நாடு காக்கப் பெற நாட்டுப்பற்று இதயத்தில் எழுந்து நிற்கவேண்டும்! இதயத்தை ஒனறுபடுத்தும் ஆற்றல் உரைநடையைவிடப் பாடலுக்கே உண்டு என்பது உண்மை. இதை உணர்ந்து நாமக்கல கவிஞர் பாடலும், தேசியக்கவி பாரதியார் பாடலும், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் பாடலும் நாட்டார்வம் கிளர்ந்து எழுவதற்குப் பயிற்றுவிக்கப் பட்டன. கவிதைப் பயிற்சியிலேயே வளர்ந்ததனுல் படிப்பவர்கள் கல்வியும் சிறப்புற்றிருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா? படிப்பவர்கள் அறிவை மட்டுமா அடைகிருர்கள்? மொழி எழுச்சியையும் - நாட்டைப் பற்றிய விழிப்புணச்சியையும் அல்லவா தம் குருதியில் கலந்து கொள்கிருர்கள்!

பஞ்சாலைகளில் இடையிடையே ஏற்படும் விடுமுறைக் காலங்களை நன்கு பயன்படுத்த வேண்டும் என எண்ணிய பொறுப்புள்ள அவ்விருவரும் தக்கவண்ணம சிந்தித்தனர். தொடர்ந்த விடுமுறைப் பொழுதிலெல்லாம் நாடகங்கள் பயிற்றுவிக்கப்பட்டு நடிக்கப் பட்டன. அதற்கான வழிவகைகளின் முழுப் பொறுப்பையும் பள்ளி எடுத்துக் கொண்டது. நாடகங்கள் நாட்டுணர்ச்சியையும் அற உள்ளத்தையும் தட்டி எழுப்பப்படும் வகையில் புது முறையில் சீர்திருத்த வழியில் மேடையேறின.


நாடகங்கள் ஒன்ருல்தான் பாமர மக்களையும் தட்டி எழுப்பி மேலும் அறிவுணர்ச்சி உள்ளவர்களாகவும் அறநெஞ்சம் பெறுபவர்களாகவும் மாற்றமுடியும் என நம்பினர். நீதியையும் ஒழுக்கத்தையும் வற்புறுத்தும் எண்ணிறந்த நாடகங்கள் நடிக்கப் பட்டன. "குடியொழித்த ஆறுமுகம்-கள்ளொழிந்த சேலம்"-என்ற நாடகங்கள் பெரியவர்களிடம பரவியிருந்த குடிப்பழக்கத்தை வேரோடு களையப் பெரிதும் துணை செய்தன. "குடிப் பழக்கம், குடியைக் கெடுக்கும்" என்பதை அந்நாடகங்கள் எடுத்து முழங்கின. ஏற்றுக் கொண்டோர் பலர். அதனுல் திருந்தினர். கள்ளிடமிருந்து மக்கள் வாழ்வு ஓரளவு மீட்கபபட்டது.

வாழ்க்கையில் பகுத்தறிவு படர்மையால் பல முறையில் தொழிலாளர் வாழ்வு அன்று ஏமாற்றப்பட்டிருந்தது. அன்று நாட்டில் நடமாடிய போலிச் சாமியார்கள் கொடுமை, சொல்லுந் தரமன்று! உள்ளத்தில் கள்ளமும் புறத்தில காவியுடையும் தாங்கி ஊரை ஏமாற்றிய கொடியவர்கள் பலர். எதையும உண்மை என்று நம்பும் உள்ளமுடைய முற்போக்கு உள்ளம் வளர வளரப் பொறுப்பாளர்கள் தங்கள் உள்ளங்களைக் கற்பார் மீது ஏற்றி அமைக்க முற்பட்டனர். சாதி வெறியும் மத வெறியும் தலைவிரி கோலத்துடன் வீறுநடை போட்ட அந்நாளில் மெல்ல மெல்ல அதனது கொடுமைகளை எடுத்துக் காட்டத் தொடங்கினர்.

மக்களைக் கப்பியுள்ள பெருஞ் சிறை சாதி எனப் போகுமிடமெல்லாம் சொல்லினர். சாதிச் சழக்கால் சனாதன தர்மம் பேசி அடிமைகளாக நின்ற அத்தனை மக்களையும் ஈர்த்திழுத்து ஒருமுகப்படுத்த நாடகங்களையே மறுமுறையும் கையாண்டனர். "நந்தனார்"-நாடகம் பல முறை நடிக்கப்பட்டு ஏற்றத் தாழ்வுக கொடுமைகள் எழில்படச் சித்தரிக்கப்பட்டன. "பிறப்பில் ஏற்ற தாழ்வில்லை" என்றும், பிறப்பு பேதத்தால் உயர்ந்தவர் என்று சொல்லப்படுபவர்கட்கு உப்பரிக்கை வாழ்வும் தாழ்ந்தவர் என்று சாற்றப்படுபவர்கட்கு அடிமையிலும் கீழான அல்லல் வாழ்வும் தரப்படுவதை நாடகத்தின் இடையிடையே நாடகக் காட்சிகள் கொண்டே விளக்கினர்.

"எல்லோரும் ஓர் குலம்-எல்லோரும் ஓர் நிறை" எனச் செம்மாந்து முழங்கினர். "சாதி பேதங்களைப பாரோம்" என உச்சக் குரலில் உரைத்தனர். "உயர்வு தாழ்ச்சி சொல்லல் பாபம்" என அறை கூவினர். "மக்கள் எத்தனைகோடியுண்டோ அத்தனை கோடி இங்கு சாதி" என்று சொல்லிப்பழமையில்மூழ்கியிருந்தவர்களது இருதயப் பூட்டுகளை உடைத்தெறிந்தனர். இப்புதுமைப் பாடல் கருத்துக்கள் நாடகங்கள் வாயிலாக வெளிப்பட்டமையால் வீதி தோறும், வீடு தோறும் ஒலித்தன. தம்மையறியாமல் இளைஞர்களின் இதழ்கள

— 9-ம் பக்கம் —



நீர் இறைத்து நிறைப்போர்.

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

# என்னணம்

மலர் 6 | 27-2-'60 | இதழ் 37

## ஒழியட்டும்! ஒழியட்டும் ஊழல் ஒழியட்டும்!

ஊழல்!

முக்கைத் துளைக்கிறது. நெஞ்சைக் குமட்டுகிறது. காற்றடிக்கும் திக்கெல்லாம் இத்தீநாற்றமடிக்கிறது. காங்கிரசார் இருக்குமிடம் எல்லாம் ஊழல் தலைவிரித்தாடுகிறது! ஆமாம்! புகையின் நடுவே தீ இருப்பதுபோல், காங்கிர சாட்சியின் இடையே ஊழல் இருக்கிறது!—இப்படிப் பொதுவான கருத்து நாள் தோறும் ஆழத்தில் வேர் விடுகிறது. மேடைகள் தோறும், ஏடுகள் தோறும், இந்தப் பேச்சே அடிபடுகிறது. நாமெல்லாம் சொன்னபோது எள்ளி நகையாடியவர்கள் இன்று விழி பிதுங்க நிற்கிறார்கள். நாம் எடுத்துக்காட்டியபோதெல்லாம், போட்டி, பொருமைகள் மிகுந்ததால், பொய்யையும் புளுகையும் வாரியிரைக்கின்றனர் என்றனர். நாம் சொன்னபோதெல்லாம் சீறிப் பாய்ந்தவர்கள், இன்று அதே கருத்தை முழக்கிவரும் ஒரு மனிதரைக் கண்டு அஞ்சி நடுங்குகின்றனர்.

அணுகுண்டென வெடித்து ஆயிரம் உண்மைகளைக் கொட்டும் அந்த மனிதரைக் கண்டுதான் நடுநடுங்கிச் சாகின்றனர். இப்படி உண்மைகளை வெடிக்கும் மனிதர் வேறு யாருமில்லை; அன்று சில நாட்கள் தில்லிக்கொற்றத்திலே வீற்றிருந்த சிந்தாமண்தேசுமுக்தான்!

மாற்று இயக்கத்தார்கள் சொன்னபோதெல்லாம் எள்ளி நகையாடிய அதே அமைச்சர் பெருமக்கள்தான் இன்று சிந்தாமண்தேசுமுக் என்ற தனிப்பட்டவர் சொன்னதும் ஓடி ஒளிகின்றனர்; வாடி வதங்குகின்றனர்.

பெங்களூர் மாநாட்டில் பெரும் பகுதி நேரம் இரண்டு செய்திகளைக்குறித்துச் செலவானது. ஒன்று சீனத்து எல்லைச்சிக்கல்; மற்றது ஊழலை விசாரிக்க ஒரு குழுவை நிறுவுதல்.

இப்போது கூடியுள்ள பாராளும் மன்றத்திலும் இதேபேச்சு. "தேசுமுக்கின் குற்றச்சாட்டுக்கு, தேசப் பிதாக்கள் சொல்லும் பதிலென்ன?" என்ற கணைகள் பாராளும் மன்றத்தில் நாலு பக்கமிருந்தும் தொடுக்கப்பட்டன. வாய்மூடி முகம் வாடிக்கிடந்த "காசுமீர் மைனர்கள்" பதில் சொல்லவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப் பட்டிருக்கிறார்கள்.

ஏழையரின் எலும்புகளை முறித்தெடுத்துத் தமது அரியாசனத்தை அமைத்துக் கொண்டனர் அமைச்சர்கள்!

வறியோரின் வெங்குருதியைத் தாமரைத் தடாகமாக்கிக் கொண்டனர், ஆளவந்தார்!

அத்தனையும் களங்கப் பாதைகள்; அவர்கள் சேர்த்திருப்பனவெல்லாம் திருட்டுச் சொத்துக்கள்; அவர்கள் வைத்திருப்பனவெல்லாம் ஊரார் வயிற்றிலடித்துச் சேர்த்தவை!- இப்படி நாட்டு மக்கள் எல்லோரும் சொல்லினர். அதைச் சிந்தாமண் தேசுமுக் அவர்களும் விளக்கிக் காட்டி வினாத் தொடுக்கிறார்.

"சிந்தாமண்தேசுமுக்கின் குற்றச்சாட்டுக்கள் கற்பனையாலானவை. உண்மையானவையாய் இருந்தால், எழுதி அனுப்பட்டுமே, சான்றுகளுடன். இல்லாவிடின்...!" என்று கொக்கரித்தார் நேரு. கொக்கரித்த அவர் முகம் கருகிச் சுருங்க, தேசுமுக் முதல் பகுதியாக 16 குற்றங்களை மட்டும் குறித்தனுப்பியிருக்கிறார். என ஒரு நம்பகமான செய்தி கிடைத்திருக்கிறது.

இனிப்பண்டிதர் தப்பிக்க முடியாது. எப்படியும் அறவழிப்பட்ட ஒரு விசாரணையை அவர் நடத்தியே தீரவேண்டும்; குற்றவாளிகளைத் தண்டித்தே தீர வேண்டும்.

## என் தாய்

(6)



குடியிருந்தேன் அவள் வயிற்றில் பத்து மாதம்!-அவள் இரத்தத்தை பாலாக்கித் தந்த உணவைச் சுவைத்து உயிர் வாழ்ந்தேன் சில மாதம்!

நான் தூங்க அவள் எத்தனையோ இரவுகள் கண்விழித்திருக்கிறாள், என்னைத் தோளிலே சுமந்தபடி! எனக்கு நோய் வந்துவிட்டது. அவள் பத்தியமிருந்தாள்-வீட்டில் மற்ற எல்லோரும் விருந்து சாப்பிடுகிறார்கள். என் தாய் மட்டும் எனக்காக உப்பில்லாமல் சாப்பிடுகிறாள். ஏன்? நான் பால்குடி மறக்கவில்லையாம்! அவள் எதையாவது சாப்பிட்டுவிட்டால் எனக்கு நோய் அதிகமாகிவிடுமாம்! உயிரைக் கொடுத்து என்னைப் பெற்றவள் என் பொருட்டு உணவைத் தள்ளி வைக்கிறாள்! இந்தத் தாய்ப்பாசத்திற்கு ஈடாக எதைக் காட்டமுடியும்?

அவளுக்கு ஆயிரம்தொல்லைகள் - இடையில் நான் அழுகிறேன்-மற்றவர்களுக்கு அது எரிச்சல்! அவளுக்குத் துளியாவது கோபம் வரவேண்டுமே! என்னை வாரி அணைத்துமடியிலே இட்டுத் தாலாட்டுகிறாள்; என்னை அரசனாக்கி, அமைச்சனாக்கி, தங்க நிலவாக்கி, செதுக்காத சிலையாக்கி...இன்னும் எதை எதையோ சொல்லித் தாலாட்டுகிறாள். தாய்மையின் ஆசைக்கனவுகள் தாலாட்டிலே மிதக்கின்றன! இன்றைக்கும் அவள் மடியிலே தலைவைத்துப் படுத்து அந்த இனிமையில்லாத இசையைக் கேட்டு மகிழ எனக்கு ஆசைதான்! என்ன செய்வேன்? காலமும் கூச்சமும் என்னைத் தடை செய்கின்றனவே!

'அம்மான்னு சொல்லுடா'-எனக்குப் பேசக் கற்றுக கொடுக்கிறாள். அது மட்டுமல்ல; முதன்முதலில் எனக்குத் தமிழ்மொழியையே அறிவிக்கிறாள்! மொழியை முதலில் தாய் அறிவிப்பதனால்தானே அதைத் தாய்மொழி என்று சிறப்பாக அழைக்கிறார்கள்!

நான் பெரியவனாகிவிட்டேன்; அவளால் முடிந்தவரை என்னைப் படிக்க வைத்துவிட்டாள். நான் வேலை பார்க்க வெளியூர் பயணமாகிறேன்: "போய் வரட்டுமாம்மா?"

"கொஞ்சம் இருடா. வீதியில் யாராவது வருகிறார்களா எனப் பார்த்து வருகிறேன்!"

"ஏம்மா? வீதியில் எத்தனையோ பேர் வருவார்கள்!"

"வெளியூர் புறப்படுகிறாய். நல்லவர்கள், கெட்டவர்கள் பார்க்க வேண்டாமா?"

"உங்களுக்குப் பைத்தியமம்மா!"

"போடா, உனக்கு எல்லாந் தெரியுமோ?"-அவள் சகுனம் பார்ப்பதை மூடநம்பிக்கை என்று சொல்லமுடியாது! அது மகன் குறையில்லாமல் போய்ச் சேரவேண்டுமென்பதில் தாய்க்கு உள்ள அக்கறை. இரத்தபாசத்திற்கு இது இலக்கணம்!

"உன் மகன் உனக்கு ஏதாவது அனுப்புகிறானா?" - எல்லோரும் கேட்கிறார்கள்; அவளுக்கும் எவ்வளவோ தேவை. இருந்தாலும் என் தாய் இதயம் குளிரச் சொல்லுகிறாள், "அவன் நல்லா இருந்தால் அதுவே எனக்குப் போதும்!" என்று. இந்த அன்புக்கு ஈடாக எதைச் சொல்லுவது. பொழிகிறதே வானம்! விளைகிறதே நிலம்! இணையாகுமா இவையெல்லாம்? பள்ளியில் படிக்கும்பொழுது ஒருநாள்...என் கையில் தக்களி ஒருபுறம் பாய்ந்து மறுபுறம் வந்துவிட்டது. பாய்ந்த இடத்தில் இரத்தம் கசிவதற்கு முன்னால், தன் கண்களில் குருதிவடிய அலறி அடித்துக்கொண்டு வந்தாள். அது குணமாகும் வரை அவள் எனக்காகப் பட்டபாடு சொல்லிமுடியாது! எத்தனைதான் உறவினர்கள் இருந்தாலும் தாய் இல்லாதவர்கள் அனாதைகளே என்பதைத் தாய்மையின்மூலம் எனக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டாள். எத்தனையோ இன்னல்களுக்கிடையில் என்னை ஆளாக்கிவிட்ட அவளுக்கு நான் இன்னும் எதுவும் செய்யவில்லை.

"என்ன செய்யப்போகிறாய்? நீ, எது செய்தாலும் அவள் உன்னைப் பெற்றெடுக்கும்பொழுது பட்ட துடிப்பிற்கு எதுவும் நிறையாகாதே!"-இப்படிச் சத்தம் போட்டுச் சொல்லுகிறது மனம்!

உண்மைதான்!

உலகம் மதிக்கும் அளவுக்கு காலத்தால் அழியாத குறளை வடித்துத் தந்தானே வள்ளுவன், அவனுக்கு நாம் என்ன கைம்மாறு செய்தோம்! இன்று அவன் உருவத்தை அஞ்சல் தலைகளில் பொறித்து பெருமைப்படுகிறோம்; சிரித்து மகிழ்கிறோம்!

அதைபபோல...

இதோ என் தாயின் உருவத்தை இங்கே காண்கின்றேன்! அவளைப்பற்றி ஏதோ உளறியும் இருக்கிறேன்! இதிலே எனக்குப் பெருமை! மகிழ்ச்சி! சிரிப்பு! ஆனால் அவளுக்காக நான் என்றோ ஒருநாள் அழ வேண்டியதிருக்குமே-அதை நினைத்தாலே இதயம் குமுறுகிறது! அம்மம்மா, அதைத் தாங்கிக் கொள்ளும் அளவுக்கு அவள் என்னை வளர்த்து வைக்கவில்லையே!

காலமே! இயற்கையே! என் குடும்பக் கிளைகளிலே பழுத்திருக்கும் அந்த இலையை நான் உள்ளவரை உதிரவிடமாட்டேன! இது என் உறுதி கலந்த ஆசை!

—தேவகோட்டை தினகரன்.

# இதோ வள்ளுவர்

— முன் இதழ்த் தொடர்ச்சி —

வாய் அகன்றிருக்கக் கூடது. குறுகியும் இருக்கக் கூடாது. மெல்லிய தாய் இருத்தலும் கூடாது. அப்படியிருந்தால் வாய்மைத் திறன் வாய்க்காது. ஆகையால், தமக்கென்று ஏற்படுத்திக்கொண்ட பெரும்பணியை நிறைவேற்றுவதற்கான உறுதியைத் தெளிவாகக் காட்டுமாறு திருவள்ளுவரின் உதடுகள் அமைக்கப்பட்டன.

உலகின் மீதுள்ள பெருங் கருணையால்தான் திருவள்ளுவர் திருக்குறள் இயற்றித் தந்தார் என்று கருதப்பட்டதால் ஆழ்ந்த சிந்தனை, கருணை, ஒளி, பொது நோக்கு இவை நிரம்பிய கண்கள் படைக்கப்பட்டன.

சிந்தனையிலுள்ளபோது திருவள்ளுவரின் வலது புருவம் சற்றே உயர்ந்து உள்ளம் செயல்பட்டுக்கொண்டிருப்பதைக் குறிக்கிறது.

அவரது நீண்டகன்ற காதுகள் பலப்பல ஆண்டு காலமாக அவர் பெற்ற கல்வியினுலும், உலகியல் பயிற்சியினுலும் அவர் எய்திய அறிவுத் திறனையும், தேர்ந்த செவிச் செல்வத்தையும் காட்டுவனவாக உள்ளன.

உண்பதை அளவறிந்து உண்டால் நோய் வராமல் தடுக்கலாம் என்றும், மருந்தே தேவையில்லை என்றும்

> **"குறைவாக உண்பவனிடத்து இன்பம் போல், நிறைவாக உண்பவனிடத்துத் துன்பமிருக்கும்"**

என்பன போன்ற நல்வழிகளைக் கூறிய திருவள்ளுவர் தானும் அவற்றைக் கடைப்பிடித்திருக்க வேண்டும். அதனுல் அவருக்கு உடல் நலக் குறைவு நேர்ந்திருக்காது. அக்காரணத்தால் உடல் தன் ஊட்டத்தினின்றும் இளைத்திருக்காது என்பதாலும், திருவள்ளுவர் உட்பகையை வென்ற பேராண்மை மிக்கவர் என்பதாலும் அவரது திருமேனி நல்ல இரத்தத்துடனும் கட்டுக்கோப்புடனும் பண்பட்டிருத்தலை அமைத்துக் காட்டத் தூண்டுதல் ஆயிற்று.

உலகப் பற்று சமயப் பற்று இவைகளிலிருந்து திருவள்ளுவர் விலகித்தான் இருந்திருக்க வேண்டும்; என்பதேனெனில் ஏதாவது மதத்தையோ, சமயத்தையோ தழுவிய மொழிகள் திருக்குறளில் எங்கும் தென்படவில்லை. அப்படியிருந்தால் மத, தேச வேறுபாடுகளின்றி எல்லோரும் அதைத் தத்தம் மொழியில் மொழிபெயர்த்து வருவதும் நிகழாது. மேலும் அந்நாட்களில் வாழ்ந்திருக்கக்கூடிய மத, சமய வெறியர்களிடமாவது கருத்து மாறுபாட்டினையும், கண்டனங்களையும் எழுப்பத் தவறியிருக்காது என்பதில் ஐயமில்லை. மொத்தத்தில் மனிதன் உலகில் ஒப்புற வாழ்ந்து உயரும் விதியை மாத்திரம் திருக்குறள் உணர்த்துவதால் திருவள்ளுவருக்கு சமயக் குறிகள், மதச் சின்னங்கள் முதலியவை இல்லாமல் ஆயின,

மார்பிலும், முன்கையிலும் அமைந்துள்ள ரோம வரிசைகள், தாம் ஏற்ற பணியை நிறைவேற்றிக் கொள்ளும் ஆண்மையைக் குறிப்பன.

> **தூய்மை நிறைந்த உள்ளம்**
> **தூய்மை நிறைந்த நோக்கு**
> **தூய்மை நிறைந்த வாக்கு**
> **தூய்மை பெற்ற உடல்**
> **தூய்மை யான குறிக்கோள்**

இவையிருப்பதால், திருவள்ளுவர் தூய்மையான வெண்ணிற ஆடை புனைந்திருத்தல் நன்று என்று கருதப்பட்டது.

வலக்கையில் எழுத்தாணியைப் பிடித்துள்ள அழுத்தம், மனித குலத்தின் உயர்வுக்காகத் தன் அறிவாற்ற



லால் தளராது உழைத்துத் தம் குறிக்கோளை ஈடேற்றிக் கொள்ளும் வலிய ஊக்கத்தையும், நெஞ்சுறுதியையும் காட்டுவதாகும்.

கலை நலம் நிரம்பப் பெற்று காண்போரின் அழகுணர்ச்சிக்கு விருந்தாகப் பொலியும் இடதுகை, உலகப் பொதுப் பணியை ஈடேற்றி வைக்கும் பொறுப்புடன் ஓலையைத் தாங்கி நிற்பதாக அமைக்கப்பட்டது.

வலதுகால் பெருவிரல் மட்டும் சற்று முன் வளைந்திருப்பது ஏனெனில் கால் பெருவிரல் அற்ப ஆசைகளைக் குறிப்பது. அந்த ஆசை வெளியில் தூக்கி எறியப்பட்டு விட்டது என்பதை வற்புறுத்த.

என்ருல், நிராசையோடு உலகத்தினிடம் பயனேதும் கருதாது பணி செய்து கிடப்பதே தன் கடனென்று நினைத்தார் என்க.

அல்லாமல், எல்லோருக்குமே சிந்தனை தீவிரமாக இருக்கும்பொழுது கால் பெருவிரல் அடுத்தவிரலுடன் நெண்டிக் கொண்டேயிருக்கும் சிந்தனை சீர்பெற முடிந்ததும் ஒரு நிலையில் நின்றுவிடும். ஆகையால், அதற்கும் ஒப்ப அமைக்கப் பட்டது.

ஏற்கனவே எழுதப்பட்ட திருக்குறளின் பல அதிகாரங்கள் அவருக்கு வலப்புறம் குவிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைத் தொடர்ந்து அப்பாலும் பல அதிகாரங்கள் குவிந்திருக்கின்றன. என்று ஊகித்துக் கொள்ளும்பொருட்டுச் சில சுவடிகளின் சில பகுதிகள் மட்டுமே தெரிவதாக வரையப் பட்டுள்ளது.

கையில் பிடித்துள்ள ஓலையில் ஒன்றும் எழுதாததற்குக் காரணம் தமிழில் இலக்கிய வரம்பிற்குட்பட்டு நயம்பெற மிகச் சுருக்கமாக எப்படிஎழுதவேண்டுமென்ற சிந்தனை திருவள்ளுவருக்கு இருந்திருக்க முடியாது. ஆகவே எழுத அவர்தம் விரல்களுக்கே தெரியும். ஓலையில் எழுத்தாணியை ஊன்றி விட்டால் குறள் முடிந்துதான் எழுத்தாணி இடம்விட்டுப் பெயரும். இந்நிலையில் மக்களுக்கு அடுத்துச் சொல்லப்பட வேண்டியது யாது என்னும் சிந்தனையிலிருக்கும் நிலையாக உருவகம் செய்து கண்களை சிந்தனையில் ஆழ்ந்திருக்கச் செய்திருப்பதால், இந்த ஓலையில் ஒன்றும் எழுதாமல் விடப்பட்டது.

திருவள்ளுவர் தமக்கென வாழாதவர் என ஊகிக்கப்பட்டதால் அவர் ஆசையற்று இருந்திருக்க முடியும். ஆசையற்றவிடத்தில் துக்கம் இருக்க முடியாது. அவர் தூய கருத்துலகில், சிந்தனை வானில் வாழ்ந்தவராதலால் அவரது சூழ்நிலையும் தூய்மை என்பதைக் குறிக்கவே பின்புறம்-இரு பக்கங்கள்-இவற்றில் மரம், செடி, கொடிகளோ-வீடு, வாசலோ எவற்றையும் அமைக்காமல், அவரது உருவத்திலிருந்து வெளிப்பட்டுப் பரவி நிற்கும், அறிவுச் சுடர் ஒன்றுமட்டுமே இடம் பெறலாயிற்று.

அநேகமாக மனித சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி உள்ளவர்களுக்கு சிரத்தைச் சுற்றிலும் "ஒளிவட்டம்" ஒன்று சித்திரத்தில் அமைப்பது மரபாக இருந்து வருகிறது. ஏனெனில் அவர்களிடத்தில் பேரறிவின் ஒளி வீசுகிறது என்பதை எண்பிக்க. ஆனுல் திருவள்ளுவருக்கு அந்த ஒளியை வட்டமாக அமைக்காமல் தலையைச் சுற்றிலும் தூய நிறம் ஆரம்பித்து அது எங்கு போய் முடிகிறது என்பதைக் காட்டாமல் சுற்றிலுமுள்ள மங்கலான இடங்களில் சென்று பாய்ந்து முடிவு தெரியாமல் விடப்பட்டிருப்பதற்குக் காரணம் திருவள்ளுவரின் ஒளி மற்றையோர் போல வட்டமாகத் தனக்குமட்டும் நின்றுவிடாமல் வெளி உலகிற்கு ஊடுருவிப் பாய்கிறதைக் காட்ட.

மண் தரையில் மரப்பலகையின் மீது வள்ளுவர் அமர்ந்திருத்தல் ஏனெனில், எதையும் உயராது இழுக்கும் பூமியின் ஆற்றலும் அவரது சிந்தனை உயர்வதைத் தடுப்பதற்கில்லை. அத்துடன் உலகத்தோடு ஒட்ட ஒழுகியும் உலகியலுக்குத் தாம் அடிமையாகாமல் தனித்து நின்று தனிப்பெரும் அறநெறியை வகுத்துத் தந்த தனிப்பெருந் தகையான அவர் தம் தூய்மையுற்ற உணர்வு, செயல், ஆடை முதலியவற்றை எந்த வகையிலும் அழுக்குத் தீண்ட இடந்தருவது இழுக்காகுமெனக் கருதியதாகும்.

நம் நாட்டின் ஒப்பற்ற அறிவுச்செல்வமாகிய பெருந்தகை திருவள்ளுவரின் ஒளிவடிவம் இந்த ஓவியன் உள்ளத்தில் உருக் கொண்ட வகையிலேயே நீர்க் கலவை வண்ணக் குழம்பு கலந்து தீட்டிய இந்த வடிவிலும் நிலைபெற்று அமைவதாகும்.

வாழ்க, வள்ளுவரின் அறிவுப் பேரொளி!

— வேணுகோபால (சர்மா)

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

அப்பாடல்களின் தொடர்களை முணு முணுத்தன. அம்முணு முணுப்பு இதயங்களில் கால் கொள்ளத் துவங்கிவிட்டது.

செயல்கள் வெற்றியுறுவதைக் கண்ட பெரியவர்கள் ஏற்றத் தாழ்வு பேதங்களைத் தெரிய எத்தனையோ நாடகங்களை ஓரங்கக் காட்சிகளாக அமைத்து நடிக்கச் செய்தனர். ஏற்கத்தக்கக் கருத்துக்களைத் தொகுத்துக் கூறும் இளஞ் சொற்பொழிவாளர்களை ஆங்காங்குத் தேடி, அவர்களைக் கொண்டு புது முறையில் சொற்பொழிவுகள் நிகழ்த்தி, உள்ளங்களைக் கவர்ந்தனர்.

அறிவு வளர வளர-அனைவரும் ஆசிரமத்தின் பக்கம்-வரலாயினர். மக்கள் வாயிலாகவே இரு பெரியார்களது இலட்சிய கீதங்கள் தெருக்களில் துள்ளுநடை போட்டன. அனைத்துச் சாதி மக்களையும் அழைத்தார்கள் ஏற்றத்தாழ்வு இல்லை என்பதைச் செயல்மூலமாகவே அனைவரையும் ஒத்துக்கொள்ள வைப்பார்போல "சமபந்தி போசனம்", "நிலாச் சாப்பாடு", "தோழர்களின் நட்புறவு உணவு" என்றெல்லாம் பெயரிட்டு, ஒன்றாக உண்ணச்செய்தனர். வெளிப்புறங்களில் எங்கும் நடவாத புதுமை ஆசிரமத்தின் உட்புறங்களில் நடந்தது. ஒரே உணவை ஒரே இடத்தில்-பல சாதியினர் மனம் கலந்து உண்டனர் என்றால் அன்று அது பெரிய வியப்பல்லவா!

பழமையாளர் துன்பம்தரும் படலத்தைத் துவங்கிவிட்டனர். அறிவை அறிவால் வெல்ல முடியாதவர்கட்குச் சூழ்ச்சிதானே கருவி! அக்கருவி கொண்டு வளர்பிறை போன்று வளர்ந்த கல்விக்கூடத்தை, வகையாகத் தாக்க முயன்றனர். எங்கெங்கும் எதிர்ப்புக் குரல்களை எழுப்பினர். பார்ப்பானையும் - பறையனையும் ஒன்றுபடுத்தும் இவ்வாசிரமத்தார் சமுதாயத்தையே படுகுழி நோக்கி இழுத்துச் செல்கின்றார்கள் என்றார்கள். அது மட்டுமா! முன்னோர் வகுத்த வழி முறையையே மாற்ற முயலும் ஆசிரமத் தொண்டர்களைக் கொடிய புரட்சிக்காரர்கள் எனக் கொக்கரித்தனர். "இறைவனால் படைக்கப்பட்ட சாதியை எடுத்தெறிய விரும்பும் இவர்கள் யார்?" என்றனர்! சமுதாயத்தின் வரம்பு கடந்து, முரட்டுத்தனத்தைக் கையாளும் குருடர்கள் என்றார்கள்.

எதிர்ப்புக்காரர்களின் பிரச்சாரம் வலுப்பெற வாய்ப்பு ஒன்றும் அமைந்துவிட்டது. ஆசிரமத்துக்கு வித்துவாக நின்ற ஒருவர் "கலப்புத் திருமணம்" வேறு செய்துகொண்டு விட்டார். எதிர்ப்பாளர்கட்கு, இத்திருமணம் எரியும் நெருப்பில் எண்ணெய் வார்ப்பதுபோல் பயன்பட்டது. குன்றாமல் - குறையாமல் - தங்கள் தொழிலை நீட்டி வளர்த்த எதிர்ப்பாளர்கள் தங்கள்குரலை உயர்த்திக்காட்டக் கையாண்ட வழிகள் பலப்பல. ஆசிரம ஊழியர்களும் - பொறுப்பாளர்களும் "எதுவரினும் அஞ்சோம்-நில்லோம்" என்றனர். எதற்கும் ஈடுகட்ட இரும்பு இதயம் இருக்கிறது என்றார்கள். கொஞ்சம் வளர்ந்த சிந்தனை படைத்தவர்களல்லவா மக்கள்! எத்துணை நாட்களுக்கு அறிவைக் கட்டிப் போடமுடியும்? முடிவில் அறிவு வென்றது. எதிப்புக்காரர்கள் குரல் பரிதிமுன் பனிபோல் மறைந்தது.

மறுபடியும் ஆசிரமப் பணிகள் கவர்ச்சி தரத்தக்க - புது வழியில் புறப்பட்டன. தொண்டுடன் தொண்டாகத் தோள்தர வந்த பொதுமக்கள் ஏராளம்.

அத்துணைப் பேரையும் ஆதரவுக்கை நீட்டி ஆசிரம ஊழியர்களும் பொறுப்பாளர்களும் அழைத்துக் கொண்டார்கள். நெருங்கிப் பழகும் வாய்ப்பு பொதுமக்கட்கும் - "புனிதக் கூடத்துக்கும்" ஏற்பட்டமையான் நெஞ்சக் கசடு ஒழிந்தது. காட்சியில் உண்மையே புலப்பட்டது. நெருக்கம் வளர்ந்து. ஒற்றுமை பெருகியது.

பல உல்லாசப் பயணங்கள்-எண்ணிறந்த வன போசன அமைப்புக்கள் - விளையாட்டுப் பந்தய இணைப்புக்கள்-அத்தனையும் அழகுற பொதுமக்கள் உழைப்புடன் நடந்தன. பயனின்றிக் கழிந்த அவர்கள் விடுமுறைக் காலம்-வீண் சண்டைக்கும் வெற்றுச் சச்சரவுக்கும் இடமாக நின்ற அவர்கள் விடுமுறைக் காலம்-நல்ல வழியில்-அறிவுச் சிந்தனைக்குப் பயன்படுகிறது என்பதையெல்லாம் தெளிய உணர்ந்த பொதுமக்கள் "ஆசிரமப் பணி தன்னலம் கருதாப் பொதுப்பணி"- என்பதை நன்கு உணர்ந்து ஆசிரமத்தின் அன்றாடப் பணிகட்குத் தோள் கொடுக்க முந்திக்கொண்டனர்.

ஏராளமான குழந்தைகள் பள்ளியில் இணைக்கப்பட்டனர். தொழில் கலந்த கல்வி தரப்பட்டது. ஆசிரமத்தையும்-அதன் சுற்றுப் புறங்களையும், மலஜல கழிப்பிடம் உள்பட மாணவர்களும்-ஆசிரமத் தொண்டர்களுமே சுத்தம் செய்துகொள்ள வேண்டும். பள்ளித் துப்புரவுப் பணி தொழிலறிவு என்ற பெயரில் கற்பிக்கப்பட்டது. அத்துடன்தோட்டவேலை-நூல்வேலை - மரவேலை - அனைத்தும் இணைக்கப்பட்டு படிப்போடு தொழிலையும் ஒன்றாக-இணைத்தது ஆசிரமம். இன்று அரசாங்கம் எண்ணக்கூடிய இம்முறை 30 ஆண்டுகட்கு முன்னரேயே ஆசிரமத்தில் செயல்பட்டது என எண்ணும்பொழுது எத்துணை மகிழ்ச்சி!... ஆசிரமப் படிப்புக்கு வந்த மாணவர் கூட்டத்தால் அப்பள்ளியில் - இட நெருக்கடி பல மடங்கு பெருகியது. விரிந்த கட்டிடமொன்றுக்கு அக்கல்வி அனைத்தையும் விரைந்து மாற்ற வேண்டிய இன்றியமையாமை பொறுப்பாளர்களைப் பற்றிக்கொண்டது. துவங்கியது முதல் 6 ஆண்டுகள் அக்கட்டிடத்தில் பணிபுரிந்தது ஆசிரமம்.

1936-ம் ஆண்டுத் தொடக்கம். ஆம்! அவ்வாண்டே ஆசிரம வரலாற்றில் புதிய விடிவெள்ளி. தனக்கொரு புதுக் கட்டிடத்தை, வள்ளல்கள் உதவியால் - பொதுமக்கள் வியர்வையால் கட்டியது. ஆசிரமம் கட்டிய அக்கட்டிடத்துக்கு முதல் நல்கியவர் D. N. சிரூர் ஆவார். அவர் பெயரைப் பளிங்குக் கல்லில் பொறித்துக் கல் வெட்டி, இவ்வாசிரமம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டது. இன்றும் அக்கட்டிடம் "சிரூர் அறை" என்றே அழைக்கப் படும் இது. மிகவும் வனப்புள்ளது.

இப்புதுக் கட்டிடம் எழும்பிய ஆசிரமத்து நிலப் பகுதி ஒரு இடுகாடு. ஆம்! சிறையில் தூக்குத் தண்டனை பெற்றவர்களைப் புதைக்கும் சுடுகாடு. எதிரில் பெரிய விரிந்த மைதானம். கருமையைத் தாங்கியுள்ள காடுபோன்ற மாந்தோப்பு சுற்றிலும். இன்னல் ஒன்றல்ல; இரண்டல்ல. இரவில் அப்பொழுது அப்பகுதியில் கள்வர் பயமும் அதிகம். அப்பகுதிக்கு அன்று மக்கள் வரவே அஞ்சுவார்களாம். அவ்வளவு கொடிய இடம். அத்துடன் பேய், பிசாசு என்னும் அச்சம் வேறு.

முன்னோடிகளாக நின்ற தொண்டர்களும் பொறுப்பாளர்களும் அறிவு என்னும் அங்குசத்தால், மக்களின் அச்சத்தைக் களைந்தனர் பேயும் பிசாசும் சாத்தானும் வீரனும் நம் உள்ளத்தின் வெளியீடுகளே என்று சொல்லி அழைத்தனர். ஆர்வத்தையே ஆற்றலாகக் காட்டி, அனைவர்க்கும் நேசக் கரங்கள் நீட்டினர் இரு பெரியவர்களும் நெஞ்சுத்துணிவு என்னும் விளக்கையே பெரிதாக்கி இருட்டைக் களைந்து ஒளிமிக்க இடமாக மாற்றினர். எட்டியிருந்த மக்கள் இவர்கள் துணிவைக் கண்டு கிட்ட நெருங்க முயன்றனர்.

பள்ளியைச் சுற்றி மக்கள் குடியேறினர். முழுமையும் அவர்கள் வாழ்வில் சுகாதாரமும் சுத்தமும் இன்னும்கூடக் குடி புகவில்லை. அடிக்கடி அன்றைய ஊழியர்கள் மக்களிடம் எடுத்துப் பேசி - வீடுவீடாகச் சென்று விளக்கம் தந்து-விளையாட்டு போல் உண்மைகளை எல்லாம் எழில் படச் சொல்லித் திருத்தினர். பலன் கிட்டியது. இப்பொழுது இவ்வட்டாரத்தில் பரவியுள்ள மக்கள் தொகையில் அன்று கால்பங்கு மக்கள் இருந்தனர் எனலாம்.

எதிர்ப்புக்கள் முன்போல் ஒரு முறை எழுந்தடங்கியது "சுடு காட்டில் பள்ளிக்கூடமா?" என்றெல்லாம் கேட்டார்கள். "சுடுகாடு மனிதன் மரித்த இடம்தானே" என்று பதில் தரப்பட்டது. சும்மா விருந்துவிட்டார்கள்.

இவ்வாசிரமத்தின் பணியையும் தொண்டையும் இன்னும் புரிந்து கொள்ளாத மக்கள் பலர் இன்றும் உள்ளார்கள் என்று சொல்லும் பொழுது வேதனைப்படவே வேண்டியுள்ளது. சுயநலமிகளும் குறுகிய நோக்குடையவர்களும் ஏதாவது சொல்லிக்கொண்டிருந்தாலும் "பரவாயில்லை-அவர்கள் திருந்துவார்கள்!" என்ற எண்ணத்தில் ஆசிரமம் வளர்கின்றது.

எது எவ்வாறாயினும், இன்றைய உலகியலின் முழுவிழிப்புக்கு முன்னர், விழித்துச் செயல் புகுந்தது ஆசிரமம் இன்றைய அரசாங்கம் கரும் புதுத் திட்டங்கள் நமது ஆசிரமத்துக்குப் புதிதல்ல. எதிர்நோக்குச் சிந்தனையுடன் ஏற்று வாழ்வில் நடத்தி - அதனால் ஏற்பட்ட எதிர்ப்புகட்குப் போராடி இறுதியில் வென்று, விழுப்புண்கள் பலவற்றை ஆசிரமம் தாங்கியுள்ளது என்று தெளியக் கூறலாம்.

எடுத்த செயலை எழிலுடனும் எண்ணும் செயலை தூய்மையுடனும் ஆற்றுவது, ஆசிரமத்தின் குறிக்கோள். இன்று நீங்கள் பார்க்கும் ஆசிரமம் செய்யும் தொண்டுகள் பல. அதன் பட்டியலைப் பாருங்கள்.

1. 1600 ஏழைக் குழந்தைகள் சிறூர் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு முடியக் கல்வி அறிவு பெறுகிறார்கள்.

2. படிப்பகத்திலும் 400-க்கு மேல் திங்களொன்றுக்குப் பொது மக்கள் பங்குகொண்டு பொது அறிவு பெறுகிறார்கள்.

3. 50-க்குமேல் திருக்குறள்-சிலப்பதிகார வகுப்புக்களில் பொது மக்கள் இடம்பெற்றுத் தமிழிலக்கிய அறிவு பெறுகின்றார்கள்.

4. அரசியல்-இலக்கிய-விவாதக் கூட்டங்கள், விஞ்ஞான-பொதுநலப் படக் காட்சிகள், அறிவையும்-ஆர்வத்தையும் பரப்பும் நாடகங்கள் பல நடத்தப்படுகின்றன.

5. 550 இளங் குழந்தைகட்கு நாள் தோறும் 6 அவுன்சு வீதம் பால் வழங்கப்படுகின்றது.

6. 300 மாணவர்கட்கு மேல் இலவச உடை அளிக்கப்படுகின்றது.

7. உடற் பயிற்சி - பந்தாட்டம் போன்ற நிகழ்ச்சிகள் நாள் தோறும் காலை மாலை நேரங்களில் நடத்தப் பெறுகிறது.

8. தொண்டர் படை, சாரணர்க் குழு, உலக இந்திய விவகாரக் குழுக்கள்-நிலாச் சாப்பாடு-வெளியூர் சுற்றுப் பயணங்கள்-பொது மக்களுக்கான முகாம்கள் போன்ற பொதுநல வேலைகள் நிரம்ப நடைபெறுகின்றன.

9. மக்களைப் பிடித்திருந்த சாதி-மத பேதங்களைக் களைய-ஆதியில் அமைத்த சமபந்தி போசனம் முதலான அமைப்புக்களை தொடர்ந்து அமைத்து வெற்றி காண்கிறது.

10. பொது மக்களுக்குப் பல பெரியவர்கள் தொடர்பையும் நல்ல சொற்பொழிவையும் இடைவிடாது இணைக்கப் பாடுபட்டு வருகிறது.

11. மாணவர்கட்கு ஏட்டுக் கல்வியையும் சேர்த்து வருங்கால வாழ்வில் அவர்களை நம்பிக்கையுள்ள மனிதர்களாகச் செய்ய இன்றைய அரசியல் திட்டங்கள் வருவதன் முன்னரேயே-செய்யத் தொடங்கியதால்-தொடக்கம் முதல் அப்பணிகளில் குன்றாமல் — குறையாமல் வளர்ந்து வருவதால் — பலரின் பாராட்டுதல்கட்கு இடமாக நிற்கின்றது. (ஏட்டுக் கல்வி மட்டுமல்ல — தொழிற்கல்வி புகட்டப்படுகின்றது என்பது மிகவும் இன்றியமையாதது.)

இத்துணைப் பணிகட்கும் மூல காரணமாயிருந்த அப்பெரியவர்கட்குத் தமிழுலகம் பெரிதும் கடன்பட்டது. மக்களுக்கும் நாட்டுக்கும், குறிப்பாகத் தமிழக மக்களுக்கு ஓய்வு ஒழிவின்றி உண்மையாக உழைத்த ஒரு நிலையம் இருக்கும் என்றால் - தற்பொழுது உண்மையில் உழைக்கும் ஒரு பணிநிலையம் இருக்கிறது என்றால், எதிர் உலகில் எத்தனையோ துறைகளை வளர்த்துக்கொண்டு தூய்பணி செய்யும் நிலையம் ஒன்று இருக்கும் என்றால். அது நமது சேவாசிரமமாகத்தான் இருக்கமுடியும்.

தமிழ்ச் சமூகம் வாழ உழைத்து இதை நிறுவிய அடிப்படையானவர்கட்குத் தமிழும் தமிழரும் என்றும் என்றும் நன்றி கடன் பட்டவர்கள்.

இன்றும் நீங்கள் வந்தால் தலை நிமிர்ந்து நிற்கும் ஆசிரமத்தைப் பார்க்கலாம். தேனீபோன்று சுறு சுறுப்பாகத் தொண்டு செய்யும் ஊழியர்களையும், சிற்றெறும்புபோல் அணி அணியாக ஓடியாடும் சிறுவர்களையும், ஆலமரம்போல் விரிந்து தழைத்துள்ள ஆசிரமக் கட்டிடங்களையும், அருகுபோல் கொடிவிட்டுப் படரும் இதன் புதுப்புது பணிகளையும், அன்பு மழையும் - அறிவுமழையும் பொழியும் இதன் பொறுப்பாளர்களையும் இன்றும் காணலாம்.

இவ்வட்டாரத்தில் இவ்வாசிரமம் ஒரு பசுஞ்சோலை. தண்ணார்ந்த தருக்கள் நிரம்பிய தாமரைத் தடாகம், வாழ்வின் கண்ணான கல்வியைத் தரும் அறிவுநிலையம். வைர உள்ளங்களையும் எஃகு உள்ளங்களையும் எதிர் காலத்துக்கு ஈன்றுதரும் எழில் கூடம்; அறிவுக்கூடம்.

ஜாபர்லி பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
மதுரை.

## திருமணம்

திருப்புத்தூர்த் தோழர் **மா. சிதம்பரம்** அவர்கள், மேலூர்த் தோழியர் **மீனாட்சி** அவர்களை கடந்த 10-2-60 அன்று வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். காலையில் மேலூரில் நடந்த மண விழாவிலும், மாலையில் திருப்புத்தூரில் நடந்த வரவேற்பிலும் **வளையாபதி முத்துக்கிருட்ணன்** அவர்கள் கலந்துகொண்டு வாழ்த்துரைகள் வழங்கினார்.

திருமண நினைவாகத் "தென்றல்" வளர்ச்சிக்கு ரூ 1 அனுப்பப்பட்டது. வரப் பெற்றோம்; வாழ்த்துகிறோம்!

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

இயற்கைவழுத்தல், வீரம்பாராட்டல் சம நிலையாய்ச் சமூகத்தில் அறம் ஓம்பி நடத்தல், கலைகளில் ஒழுக்கம் பேணல் என்னும் சிறந்த மரபுகள் (Traditional moral influences) திராவிடரதுதான் என்பதில்ஐயமில்லை. தேவதாசி முறை திராவிடர்நாகரிகத்தின் ஒரு பகுதியன்று. சாதிப் பிணக்கும் சாத்திரக் கூறுபாடும் சங்ககாலத்திலும் இல்லை. தொழிற் பிரிவன்றி ஒருவருக்கொருவர் தொடர்பற்ற உயர்வு தாழ்வு கற்பிக்கும் இழிதகவுடைய இடைவெளி திராவிடருடையதன்று.

இந்தியப் பண்பு என்றால் என்ன பொருள்? இந்தியர் என்போருடைய பண்பு என்றுதான் பொருள் பட முடியும். இந்தியன் யார்? அச்சொல் இந்து மதம் தழுவுகின்ற மக்களைக் குறிக்குமா? "இந்தியன் என்ற சொல் வடமொழி நூல்களில் எங்கும் குறிக்கப்படவில்லை. ஆகவே இந்து யார்? இந்தியன் யார்? என்பதில் தீர்வு காணக் கூடவில்லை" என்கிறார் இந்துச் சட்டப் பேராசிரியர் கோபால கிருட்ணய்யர். "இந்து என்றால் அது ஒரு மதமல்ல. இந்து மதம் இந்தியாவைச் சார்ந்தெழுந்ததும் அல்ல. ஏதோ இந்நாட்டிலிருந்த சில பழக்க வழக்கங்கள். தத்துவங்கள் ஆகியவற்றிற்குக் கொடுக்கப் பட்டதோர் வசதியான வழக்குச் சொல்லே ஆகும்" என்கிறார் இந்நாள் சென்னை உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி இராசமன்னார் அவர்கள் (மைகேல் வெங்கடேஸ்வரன் வழக்கின் தீர்ப்புரை 65 L. W. 108). இக்கருத்துக்கள் எதைக் காட்டுகின்றன? இந்தியா என்று ஒரு பொதுப்பண்பு இருக்க நியாயமில்லை என்பதைத்தானே? காரணம் சிந்துநதியைக் கொண்டு இந்து, இந்தியன் என்று வெள்ளைக்காரர்கள் சூட்டினார்கள். இந்தியா முழுவதும் அன்று ஐயாயிரம் ஆண்டுகளுக்குமுன் பரவியிருந்தது மொகன்சதாரோ நாகரிகமே! அதாவது திராவிட நாகரிகமே ஆகும். புதிதாக இந்நாட்டிற்கு வந்த வெள்ளையர்கள் சிந்து வெளியிலிருந்தோரை இந்தியர்கள் என்றார்கள். ஆரியர், திராவிடர் என்ற பேதம் அறிந்ததல்ல. வெள்ளைக்காரர்கள் வந்த காலத்து வடமொழி ஆரியருக்கென்று தனியே ஒரு ஆட்சிகூட இருந்ததில்லை. ஆனால் இங்கிருந்த எல்லா ஆட்சியிலும் அன்று அவர்கள் சமயக்குரவர்களாகவும், சிலர் கலைஞர்களாகவும் பணியாற்றி வந்தனர். இந்தியாவைக் கண்டுபிடிக்கக் கொலம்பசு புறப்பட்டார். இடையில் வழிப்பட்ட அமெரிக்காவை இந்தியாவென்று கருதி ஆங்குள்ளோரை இந்தியர் என்றே அழைத்தார். பிறகு தான் அவரது தவறு தெரியவந்தது; அதாவது தாம் உண்மையாக இந்தியாவிற்கு வரவில்லை என்று பின்னர்தான் உணர்ந்து, அமெரிக்க இந்தியர்களைச் சிவப்பு இந்தியர்கள் என்றழைத்தார்கள். இதே போன்றான் சிந்து வெளி நாகரிகத்தைத் திராவிடரது என்றறியாமல் ஏதோ ஒரு பொதுச் சொல் என்று, குறிப்பில்லாது "இந்து" என்று சூட்டிப் பின்னர் இதன் வாய்ப்பறிந்த வடவர் இந்து என்பதை அவர்களையும், இந்தியா என்பது அவர்களது நாகரிக மேவிய இந்நாட்டையுங் குறிப்பதாக எடுத்துக் கூறினர். வணிகத்தில் நாட்டம் கொண்ட பிரித்தானியர் அன்று தம்மைப்போல் வெளியிடத்திலிருந்து வந்த வட ஆரியரை நம்பி அவரைக் கொண்டு பிறரை நிருவகிக்கலாயினர். ஆரியர் உரையை அப்படியே ஏற்றனர். இரண்டு போக்கில் ஆட்சியிலிருந்த பிரித்தானியமக்களின் துணையால் அவரைச் சார்ந்து வந்த ஆரிய இயல்புகளே இந்நாட்டின் பழமை எனப்பட்டது. ஆயினும் அரசியற் கலவாத ஆங்கில மேதைகள் நன்கு ஆய்ந்தும், நாட்டைச் சுற்றி நேரிற் கண்டும் இந்நாட்டுப் பண்பும், பழமையும் திராவிடருடையனவென்றும் அவர்களே சிந்து வெளியிலிருந்தவர்களென்றும் முடிவாய்த் துணிந்து கூறினர் முதலிற் குடி புகுந்த ஆரியர் அதற்கு முன்னிருந்த பழங்குடிப் பரம்பரையினரான திராவிடரை விரட்டினர். இன்றைக்குப் பெரிதும் வரலாற்று ஆராய்ச்சியிற் பயன் பட்டு வருகிற இந்தோ-ஆரியம் என்ற சொல் இனத்தாலும், மொழி வழக்காலும், ஏறத்தாழ ஒன்றுபட்டிருக்கும் மக்களையும் அவர்களது பண்பாட்டினையும் குறிப்பதாகும். இந்திய ஆரியர் அல்லது செர்மானிய மரபினைச் சார்ந்தவர்கள் தான் இச்சொல்லால் வரையறுக்கப் படுவதுண்டு மேற்கு ஐரோப்பாவிலும், கிழக்கே அர்மீனியர்கள் வசித்து வந்த பகுதியிலும் ஆரியர்கள் பழங் குடிகளாயிருந்தனர். ஆரியத்தின் தோன்றல் அல்லது இணைத் தோன்றல்களாக ரோமானியர், மேற்கு ஐரோப்பாவிலிருந்து இங்கிலாந்து, அயர்லாந்து, சுகாட்லாந்து பகுதிகளில் பரவிய ஆதிக் கெல்ட்டுகள், சுலாவ் வகுப்பினர், டியுட்டானியர் எனப்படும் பழங்குடி செர்மானியர் எல்லாம் ஆரிய வழக்கிற்குட்பட்டவர்கள். அதே நேரத்தில் துருக்கியர், அங்கேரியப் பழங் குடியினர், பிரெஞ்சு நாட்டிலுள்ள பிரனீசு மலைத் தொடரைச் சுற்றி வசித்து வந்த மக்கள், பின்லாந்து நாட்டினர் எல்லாம் ஆரியச் சார்பு எதுவுமற்றவர்கள் ஆரியரது இயல்பான மொழி சமசுகிருதம் எனப்படும். இம்மொழியின் வடிவம், ஒலிக் குறிப்பு, இலக்கண வழிகள், புணர்ச்சி விதிகள் எல்லாம் மேற்கண்ட வகுப்பினரின் மொழிகளில் நிறையக் காணப்படுகின்றனவாம். ஆரியன் என்ற தனிச் சொல்லுக்கு நிலத்தின் தலைவன், பெருமைக்குரிய குடிமகன் என்று பொருள்படுவதாகச் சொல்கிறார்கள். மேற்கு ஐரோப்பாவிலிருந்து பலரும் குறிப்பாகப் பாமீர் பீட பூமியிலிருந்து மத்திய ஆசியாவிலிருந்து நேராகத் தென்னக நிலங்களிற் சிலருங் குடியேறினார்கள் என்றுதான் வரலாறு தெரிவிக்கிறது பாமீர் பீட பூமி ஆப்கானித்தானத்திற்கு வட கிழக்கு முனையில், காசுமீருக்குச் சற்று வடமேற்கே உள்ளது. இந்துக்கள் என்றழைத்தனர்-சிந்துவின் மருவாக விளங்கியது. எனவே இவ்விரண்டு இனத்தவரின் பழம் நூல்களில் அச்சொல் காணப்படவில்லை. இடையில் வந்த ஓர் வரலாற்றுக் குறிப்புரையாகத்தான் தெரிகிறது. மேலும் வடமொழி பேணும் ஆரிய இனத்தவரின் மறைகள் ருக், யசுர், சாம, அதர்வணவேதங்கள் வேறு; திராவிடரின் ஐம்பெருங் காப்பியங்கள் வேறு. அவர்களது கீதையைவிட வள்ளுவன் குறள் பன்மடங்கு கருத்தாழமும், உலகியற் பொது நோக்குமுடையது. அவர்கள் குடியிருப்பை அக்ரகாரம் என்றார்கள்; திராவிடர்கள் தெருக்கள் என்றார்கள். அவர்கள் ஒரு நாள் பகல் இரவை ராகு, கேது, குளிகை, எமகண்டம் என்று பிரித்தார்கள். திராவிடர்கள் காலப்பொழுதில் நல்லவை அல்லவை என்று பிரித்து அச்சவுணர்ச்சியை ஊட்டவில்லை. வடமொழியாளரின் பல முறைகளும் திராவிடருடையதனின்றும் முற்றிலும் வேறுபட்டவை. விரிக்கிற் பெருகும்.

இங்ஙனம் பல தெளிவான முடிவுகள் கிடைத்தும், அறிஞர் சிலர் அவற்றில் ஒன்றுமில்லை என்று மறைத்துப் பேசும் பண்பு நீங்க வேண்டும். அறிவை அறிவால் பார்க்க வேண்டும். தற்போதுள்ள அரசியலுணர்வால் உண்மையை இன்மைக்கு இலக்காகிவிடக்கூடாது. வானொலியில் இத்தகைய கருத்தரங்கு நிகழ்த்துங்கால் நடு நிலையுள்ள பலரையும் வகைக்கொருவராய் (representative Interest) அழைத்துப் பொறுப்பாய் முடிவுகளைக் கூறுதலே பயனளிக்கும். முறைக்கு வாய்ப்பளிப்பதாகப் பலரைச் சேர்த்தல், காலம் காட்டும் வரலாற்றின் அடிச்சுவடுகளை வலிந்து மறைக்க முயலுவதாகும். இது ஆக்க வேலைக்குப் பயன்படாதென்பதோடன்றி, அறிவியலையும் நன்கு மதித்ததாகாது என்பதை ஓர்தல் வேண்டும்.

—வே. சௌந்தரராசன்

## உருசியா செல்கிறார்

பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அவர்கள் உருசியாவில் நடக்கவிருக்கும் கீழை நாட்டு ஆராய்ச்சியாளர்களின் 25-வது உலக மாநாட்டிற்குச் செல்கிறார். இம்மாநாடு மாசுகோவில் 9-8-60 அன்று தொடங்கி 16-8-60 அன்று முடிவுறும்.

இம்மாநாட்டில் கலந்துகொண்டு, சிறப்புச்சொற்பொழிவு ஒன்று ஆற்றும்படி, தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் தலைவர் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் அழைக்கப்பட்டிருக்கிறார்.

**"இந்தியப் பண்பாட்டில் தமிழின் பங்கு"** என்ற பொருள் பற்றிச் சொற்பொழிவு செய்வதாக அப்பாத்துரையார் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

இவ்வுலக மாநாட்டில் உலகத்தின் முக்கியமான கீழ்த்திசை ஆராய்ச்சித் துறைகளாக வகுக்கப்பட்டு, அவற்றுள் ஒன்றன் தலைப்பிலேயே எவரும் பேசும்படி அழைக்கப்பட்டுள்ளனர். அவ்விருபது துறைகள் ஆவன:

எகிப்திய நாகரிகம் அசிரிய நாகரிகம், யூரால் இத்தைதிய நாகரிகம், செமித்திய-எபிரேய ஆராய்ச்சியும் விவிலியப் பழமையும், பைசாந்திய (பழந் துருக்கிய) நாகரிகம், அராபிய நாடுகள் வரலாறு, அராபிய மொழி நூல், ஈரான் (பாரசீக) ஆப்கானிய நாடுகள் வரலாறு, ஈரானின் (பண்டைப் பாரசீக) மொழியாராய்ச்சி, நடு ஆசிய வரலாறு, ஆல்தாயிக் இன ஆராய்ச்சி, இந்திய ஆராய்ச்சிகள், தென்கிழக்காசியா, சீன ஆராய்ச்சி-(அ) சீன நாட்டு வரலாறு (ஆ) சீன மொழியாராய்ச்சி, கொரியா, மங்கோலியா, சப்பான், ஆபிரிக்க ஆராய்ச்சிகள்-(அ) சகாராப் பாலைவனத்திற்கு வடக்கிலுள்ள ஆபிரிக்கா (ஆ) ஆபிரிக்க மொழியாராய்ச்சி.

இவற்றுள் தமிழுக்கோ, திராவிட நாகரிகத்துக்கோ, மொழியாராய்ச்சிக்கோ இடமில்லை. இதனாலேயே அப்பா அவர்கள் இந்திய நாகரிகத்தின் பகுதியாக அதுபற்றிப் பேச ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

இவ்வாராய்ச்சிச் சொற்பொழிவுப் பகுதிகளில் பதினான்காவது பகுதியில், அப்பா அவர்களின் சொற்பொழிவு இடம்பெறும்.

இம்மாநாட்டின் தலைவர், உருசிய ஆராய்ச்சிப் புலமைவல்லுநராகிய பி. சி. கபூரோவ் ஆவார்.

மாசுகோ கீழை நாட்டு ஆராய்ச்சியாளர் மாநாட்டிற்குச் செல்வோர், லெனின்கிராடில் இரண்டு மூன்று நாட்கள் சுற்றுப் பயணம் செய்வதற்கும் ஏற்பாடுகள் நடந்துள்ளன.

## அறிவிப்பு

நான் மார்ச் முதல் சென்னையிலேயே தங்க வேண்டியிருப்பதால் எனக்கு மடல் எழுதும், இயக்க நண்பர்களும்-மற்றவர்களும்,

"ஏ. கே. வில்வம்,
4/144 மவுண்ட்ரோடு
சென்னை-6."

என்ற முகவரிக்கு எழுதும்படி தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

அன்புக்குரிய
ஏ. கே. வில்வம்




## நண்பரின் கேள்வி

53, நெடுந்தெரு,
பசறை, இலங்கை.

உயர்திரு கா. அப்பாத்துரையார் அவர்கட்கு,

"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாம் தலை".

என்ற குறள் பற்றி மலர்வினாவாக யான் எழுப்பிய ஐயவினாவிற்குத் தாங்கள் தந்திருந்த பதில் தகுந்த பதிலல்ல. வினா தங்களுக்கு விளங்காமையினாலேயே தக்க பதில் தரத் தவறிவிட்டீர்கள் என எண்ணுகிறேன். மொழிந்த சொல்லே மொழியினும் பொருள் வேறுபடுமாயின் மொழிந்தது மொழிவாய்க் குற்றமாகாது என்பதை யானுமறிவேன். ஆனால் இக்குறளில் "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்" என்ற சொற்றொடரின் பொருளும், "அச் செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை" என்ற சொற்றொடரின் பொருளும் ஒன்றே. "செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம்" என்று கூறியவதனையே மீண்டும் "அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை" என்று கூறப்படுகிறது. முன்னே கூறியவதனையே மீண்டும் கூறி அதனால் வேறுபட வொரு பொருள் விளங்காதது. கூறியது கூறலேயாகும். இது கூறியது கூறலன்று என்று கூறினால் இக்குறளின் பொருள் என்ன? "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்" என்ற சொற்றொடரும், "அச் செல்வம் செல்வத் துள் எல்லாம் தலை" என்ற சொற்றொடரும் ஒரே கருத்தையே கூறுகின்றன என்பதே என் குற்றச்சாட்டு. இது மொழிந்தது மொழிவாய்க் குற்றமாகும். என்ன உங்கள் பதில்?

அன்பன்,
மு. சு மணியம்.

## பன்மொழிப்புலவர் பதில் தருகிறார்

'செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம்' என்ற தொடரும் 'அச் சொல்லும் செல்வத்துள் எல்லாம் தலை' என்ற தொடரும் தனித் தனி முற்று வாசகங்களானால் கூறியது கூறலாகலாமென்ற கருத்துடன் தான் உரையாசிரியர்களெல்லாம் பிந்திய தொடரின் பின் 'ஆகலான்' சேர்த்து இரண்டையும் காரண காரியத் தொடரான ஒரு வாசக மாக்கியுள்ளனர். அதன் படி பொழிப்புப் பொருள் 'செவிச் செல்வம் மற்றச் செல்வங்களி டையே தலைமையானது. அதாவது தனிச் சிறப்புப் பண்புகளையுடைய செல்வமாதலால், அதுவே ஒருவ னுக்கு செல்வங்களிடையேசிறப்புத் தரும் செல்வம் ஆகும்' என்று பொருள் கூறினர்.

தொடர்கள் கூறியது கூறலன்று என்பதை உரையாசிரியர் விளக்கங் கூடக் காட்டாமலில்லை. முதல் தொடரில் பயன் சிறப்பு, முயலு பவர்க்குரிய சிறப்பும், இரண்டாவ தில் காரணச் சிறப்பு அல்லது பண்புச் சிறப்பும் குறிக்கப்படுவன வாக அவர்கள் காட்டினர். இரண் டாவது தொடர் குறித்த சிறப்புப் பண்புக்களாகப் பரிமேலழகர் மூன்று குறிக்கிறார். பிற செல்வங் கள் பொருளால் வருவன, செவிச் செல்வம் அவ்வாறன்று, அறிவு நாடி முயன்று பெறுவது என்பது ஒன்று. பிற செல்வங்கள் நிலையாதன, செவிச் செல்வம் நிலையானது என் பது மற்றொன்று. பிற செல்வங்கள் துன்ப விளைவான, செல்வச் செல் வம்தான் வந்தவிர்த்து இன்பமளிப் பது என்பது மூன்றாவது. செவிச் செல்வம் பெறுபவனுக்கு இம்முப் பண்புகளுமே முப்பேறுகளாதலால் செவிச் செல்வம் செல்வத்துள்ளே தனிப் பெருஞ் செல்வம் என்ற கருத்து விளக்கம் உரையாசிரியரது.

அன்பர் கேள்விக்கு இது முழு விளக்கம் ஆகாது என்பது உண் மையே. ஏனெனில் 'செல்வத்துள் செல்வம்' பின்னும் இரட்டித்து வருதல் காண்கிறோம். வள்ளுவ ரிடம் நாம் வழக்கமாகக் காணும் பண்பிற்கு, சொல் இரட்டுமிடங் களில் பொருள் இரட்டுறாது வேறு படும் வளப்பத்துக்கு 'இப்பொருள் கொள்வது ஒப்பதன்று குறட்பாவுக் குரிய பொருள் காண உரையாசிரி யர்களைவிட வாசகர் உணர்ச்சி நல்ல வழி காட்டு. இயல்பான வாசிப்பவர் சொல் இரட்டுதலை உவர்க்கவில்லை, அதில இனிமை காண்கின்றனர் என்பதில் ஐய மில்லை. அவ்வினிமையில் புதைந்த இயல்பான புதுமைச் சுவையை நாம் காண வேண்டும்.

வள்ளுவர் குறட்பா எடுத்த எடுப்பில் 'செல்வத்துள' என்று தொடங்குகிறது. அடுத்து, சுட்டடை கொடுத்து 'அச்செல்வம்' என்று அடியிறுதியில் கூறுகிறது. அச்செல் வம் என்பது முன் குறிப்பிட்ட செல்வத்தையே குறித்ததென்பதே எவருக்கும் இயல்பாகத் தோற்றும் கருத்தாகும்-அதுவே சரியான கருத்து என்பதில் ஐயமில்லை. ஆனால் எப்படியோ பரிமேலழகரும் அவரைப் பின்பற்றி ஏனைய உரை யாசிரியரும் அச்செல்வம் என்பது செல்வத்தைக் குறிக்காமல் செவிச் செல்வத்தைக் குறிப்பதாகக் கொண்டுவிட்டனர். அன்பரின் 'கூறியது கூறல்' ஐயத்துக்குக் காரணமான வழு இதுவே. இந்த இயல்பான பொருள் தொடர்பு காணப்படின், 'கூறியது கூறல்' விலக்க உரைநடை முறையைத் தலைகீழாக மாற்றவோ, அவ்வழி யும் இடையே 'ஆகலான்' சேர்க் கவோ, முதலடியில் வெறுப்ப வர்க்குச் சிறப்பு, இரண்டாம் அடி யில் தன்மைச் சிறப்பு என்ற மரி ரிழை வேறுபாடு விளக்கவோ தேவை ஏற்பட்டிருக்காது. இவ் வளவு செய்த பின்னும் அன்பரின் இயல்பான குற்றச் சாட்டுக்கு இடமே ஏற்பட்டுள்ள நிலையும் உண்டாகி இராது.

இயல்பான பொருள் வருமாறு!

செல்வத்து-செல்வம் என்ப சிறப்பித்துக் கூறப்படும் கல்விச் செல்வத்திலும்; செவிச் செல்வம்-கண் வழி படித்துவரும் அச்செல் வத்தைவிடக் குருமூலமும் கற்றறிந் தார் தோழமை மூலமும் செவி வழி வரும் கேள்விச் செல்வம்; உட் செல்வம் மேலான உள்ளுயிர்த் தன்மை வாய்ந்த செல்வமாகும். (ஏனெனில்) அச்செல்வம்-சிறப் பித்து முன் சொன்ன அந்தக் கல்விச் செல்வம்தான் செல்வத் துள்-பல வகைகளாகக் கூறப்படும் ஏனைய எல்லா வகைச் செல்வங் களுக்குள்ளும்; தலை—தலை சிறந்த செல்வமாகும். ★




அன்புடையீர்!

தமிழ்த்தாயின் கருவிலே தோன்றி வளர்ந்தனவே மற்றையத் திராவிட மொழிகள். இன்று அவை வடமொழிக் கலப்பால் திரிந்து தோன்றினும், அவற்றைப் பெற்றெடுத்தவள் தமிழ்த் தாய்தான் என்பதை வடமொழியின் கைக் கூலிகளும் ஒப்புகின்றனர். இதனை நாமும் பல சான்றுகளுடன் உலகுக்கு உணர்த்திவிட்டோம்.

உணர்ந்த திராவிட மொழிக் குடும் பத்தினர் நம் கழக வழிக்கு ஆதரவு தரும் நிகழ்ச்சியாக, அண்மையில் கருநாடகத்தில் நிகழ்ந்த ஒன்று அமைந்துள்ளது. பெங்களூர் அகில இந்திய வானொலியினர் அண்மையில் வானொலி வாரம் கொண்டாடினர். அவ்விழாவில் ஒரு நிகழ்ச்சியாக 9-2-60 அன்று விசார விகார குழு வினர் நடத்திய பெரல்கே கொரல் (விரலுக்குத் தலை) என்ற வசன கவிதை நாடகம் நடந்தது. அந்நாட கம் பழங் கன்னட மொழியில் எழுதப் பட்டது. ஆனால் சொற்கள் பலவும் இன்றையக் கன்னடச் சொற்களாயில் லாமல், பழந் தமிழச் சொற்களாய் அமைந்திருந்தன. எனின் பழங் கன்ன டம் எதன் வழிவந்தது என்பதை அறியலாம்!

அன்றியும் நாடகக் கதையும் நமது சிந்தனைக்கு வேலை கொடுப்பதாய் அமைந்துள்ளது. ஏகலைவன் திறமை ஆரிய அரச குடும்பத்தைச் சேர்ந்த அர்ச்சுனனின் திறமையை மறைக்கும் என்றே துரோணர் அவன் கட்டை விரலை வாங்கியதாகவும், அதற்குப் பதிலாகவே பாரதப் போரில் அவர் தன் தலையை இழந்ததாகவும் எழுதி யுள்ளார் கதாசிரியர். கதை நிகழ்ச்சி கள் புனையப்பட்டனவானாலும், ஆசிரிய ரின் மனப்பான்மை வெளியிட்டிருக்கும் போராட்டம் நோக்கத்தக்கதாகும்.

ஒரு பழங் கன்னட நாடகமான இதில் தமிழ்ச் சொற்கள் ஊடாடுவதும், அத்தோடு சமுதாயப் பிரச்னைகள் மோதுவதும் நம் கருத்துக்கு அரண் செய்கின்றன.

அன்பன்

அன்புவாசன்,
பெங்களூர்-7.

### மறுமணம்

8-2 60 அன்று திருமதி அலமேலு அப்பாத்துரையார் இல்லத்தில், திரு கா. அப்பாத் துரையார் அவர்கள் தலைமையில் தோழர் கோவிந்தன் தோழியர் கல்யாணியை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். நகராட்சி உறுப்பினர்கள் பலர் வந்திருந்து வாழ்த்துரைத்தனர். மணமக்களுக்குத் "தென்றல்"லின் வாழ்த்துக்களும உரித்தாகுக.

# செழியன் உலா

மௌனகுரு இப்போது புதியஉருவம் எடுத்திருக்கிறுர். சிறுபிள்ளைகளைப் பயப்படுத்திச் சிலர் பூச்சாண்டிகளாய் வருவர். இவர் மாற்றுக் கட்சிகளைச் சாய்த்துவிடப் பேச்சாளராய்க் கிளம்பியிருக்கிறுர். "ஆகட்டும்! பார்க்கலாம்!' எனபதைத் தவிர வேறு ஒன்றையும் பேசியறியாதஇவர், இப்போது மாதத்திற்கு 150 கூட்டங்களில் முழங்கத் திட்டமிட்டுக் கிளம்பியிருக்கிறுராம்; "பிளிட்சு" சொல்கிறது!

காய்ந்த மாடு கம்பங்கொல்லையில் புகுந்தால் எதையும் விட்டுவைக்காதாம்; எல்லாவற்றையும் தின்று தீர்க்க ஆசைப்படுமாம். திடீரென்று மேடையேறிக் கொக்கரிக்கும் இந்தக் "கோனுர்" எல்லாக் கட்சியையும் "தீர்த்துக் கட்டிவிட"க் கிளம்பியிருக்கிறுர். வாளைச் சுழற்றும் வீரர்கள் எல்லாம் இந்த நாவைச் சுழற்றும் "கோனு"ரிடம் தோற்க வேண்டும்! அவ்வளவு விரைவு! அவ்வளவு வலிவு!

அவர் அண்மையில் திருச்சி சென்று ஞானியுமாகியிருக்கிறுர். திருச்சிக்கு வரும் மந்திரிகளுக்கெல்லாம் திடீர் திடீரென ஞானேதயம் கிளம்பிவிடுகிறதாம். நெய்வேலியில் "அணை" கட்டுவது பற்றி, மராமத்து மந்திரிக்கு ஞானேதயம் வந்தது இந்த ஊரில் தான் என்பதையும் அறிவீர்கள். அச்சீடர் சென்ற வழியிலேயே மௌன குருவும் சென்றிருக்கிறுர். அங்கு அவர் பேசுகையில் "எரிக்கும் விடயத்தில் தி. மு. கழகமும் சுதந்தரக்கட்சியும் ஒன்றே!" எனத்தாம் பெற்ற திடீர் ஞானேதயத்தின் பலனுய்த் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறுர்! ஆகா! நம் முதலமைச்சருக்கு இருக்கும் கூர்த்த பார்வையையும் சீர்த்த மதியையும் என்னவென்று சொல்வது? இவரைப்போய் முதலமைச்சர் நாற்காலியில் உட்கார வைத்திருக்கின்றனரே, இந்த நாட்டார். இந்நேரம் ஞானேதயபீடம் ஒன்றுகட்டி அதில் இருத்தியிருப்பர், இவர் இங்கிலாந்தில் பிறந்திருந்தால்.

அது கிடக்கட்டும். அமைச்சரின் "ஞானேதய"த்தைப் பார்ப்போம்.

தி. மு. கழகம் பாட்டாளிகளின் கட்சி; இந்நாட்டு இனத்தவரின் இயக்கம். சுதந்தரக் கட்சியோ பணக்காரர்களின் சு(யலாப)தந்தரக் கட்சி! அகில இந்திய தேசியம் பேசுவது! இரண்டையும் இணைப்பது எப்படிப் பொருந்தும்? புருவையும் வல்லுறையும் ஒன்றெனச் சொல்லும் அப்பாவிகளை மன்னிக்கிறோம். அதேபோல் அமைச்சர் பேச்சையும் மன்னிப்போம்.

ஆனுல் ஒன்று! திருச்சி நகராட்சியில் உள்ளதோழர் பாண்டுரங்கன் நமது கழக உறுப்பினர். அவர் கொணர முனைந்த தீர்மானத்தை நகராட்சித் தலைவர் 3 மாதங்களாய் அனுமதிக்க மறுத்தார். "நகராட்சித் தலைவர் நகர மக்களுக்கு நன்மையளிக்கும் தீர்மானத்தை ஏற்க மறுப்பது தவறு" என்ற கண்டனத்தைத் தெரிவிக்க எரித்தது தவறு என்கிறுர் திருப்பெருந்திரு முன்னுள் மௌன குரு. அப்படியானுல் பம்பாய்க் கடற்கரையில் வெளிநாட்டுத் துணிகளை மலைமலையாய்க் குவித்துவைத்து எரித்தனரே காங்கிரசார்—அது தவறு? இன்னும் பல நேரங்களில் "சான்புல் கொடும்பாவி" கட்டி இழுத்து வந்து எரித்தனரே —அது தவறு? எதிர்ப்பைத் தெரிவிக்க எத்தனையோ வழிகள். அமெரிக்க மக்கள் இங்கிலாந்தின் முத்திரைச் சட்டதை எதிர்க்க, பெட்டி



தஞ்சை ஊர்வலக் காட்சி—
தனிப் பெரும் கவர்ச்சி!

பெட்டியாக வந்த தேயிலையை கலத்திலிருந்து தூக்கி அப்படியே கடலில் எறியவில்லையா? பல்லாயிரம் வெள்ளிகள் பாழானுலும், தம் வெறுப்பைத் தெரிவித்துத் தீர்க்கத்தானே அவர்கள் அப்படிச் செய்தனர்? அது தவறு? அவை தவறுனல் பாண்டுரங்கன் செய்ததும் தவறே!

x x x

ஆன்ற அறிவு, அருஞ்சொல்லான்மை, வரும் பொருளுணர்தல் முதலிய அனைத்தும் அமைந்தால்தான் அமைச்சு எனப்படும், பழந்தமிழ் நூல்களில். இன்று நாம் எதை யெதையோ எல்லாம் அமைச்சு என்கிறோம்! எவரெவரையோ எல்லாம் அமைச்சர் என்கிறோம்! என்ன செய்வது? தமிழகத்தின் அரசியல் அறிவு அப்படியாகிவிட்டது!

x x x

"சஞ்சீவியார் சமய சஞ்சீவியராகத் திகழ்வார் இனிமேல்!" என்றெண்ணித்தான் தலைமைபதவியைத் தந்தார் நேரு. ஆனுல் அவர் நேருவின் நம்பிக்கையில் சதாசிவ நகரிலேயே மண்ணைப் போட்டு விட்டார். ஐயாயிரம்பேர்கூடக் கூடாத அம்மாநாட்டை "பெங்களூர் மாநாடு மிகப் பெரும் வெற்றி!" என்று வருணித்தார். இப்படி வார்த்தையைத் துணிந்து சிந்துகிறுரே என்று நேரு நொந்தார். அதோடு நிற்கவில்லை சஞ்சீவியாரின் திருவாய்.

அவர் கட்டிடக் கால்கோள் விழாக்களுக்கு வரமறுப்பவர். அது ஏன் என்பதை அண்மையில் நாசிக்கில் விளக்கியுள்ளார். மூன்று அமைச்சர்கள் மூன்று கட்டடங்களுக்குக் கால்கோள் விழா நடத்திஞர்களாம். ஆனுல் பின்னர் அவ்விடங்களில் கட்டடங்களே எழவில்லையாம். இதனுல் அமைச்சர்களுக்கு அவமானம் ஏற்பட்டது போலும். இதைப்பார்த்தாலோ என்னவோ, சஞ்சீவியார் கால்கோள் விழாக்களுக்கு வர மறுக்கிறுர். நல்லதுதான். இப்படிப் பெரிய மனிதர்கள் வராமல் எளிய முறையில்அடிப்படை இடப்படுவதால் செலவுகொஞ்சம் மிஞ்சுமல்லவா? "சரி! இந்தத்தவறு மட்டும்தானு நடக்கிறது?" என்பீர்கள். இல்லை! இன்னும் பல நடக்கின்றன.

சஞ்சீவியாரைத் தோற்கடித்திருக்கிறுர் நேரு. பிரம்மபுத்திரா ஆற்றினூடே சில கோடிச் செலவில் ஒருபுகைவண்டிப் பாலம் கட்டப்படுகிறது. இதன் வேலைகள் ஓராண்டுக்கு முன்பே தொடங்கி, மூன்று பியர்களும் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. இன்னும் கொஞ்சகாலத்தில் வேலைகள் முழுக்க முடிந்து, பாலத்தில் போக்குவரத்துத் தொடங்கி விடும். இந்நிலையில் ஒரு மனிதர் இப்பாலத்திற்கு அடிப்படைக் கல் நாட்ட வந்திருக்கிறுர். ஒரு திங்களுக்கு முன் இந்தப் பணியைச்செய்தவர் யார் தெரியுமா? அவர்தான் அமைச்சர்களின் சம்பளத்தைக்குறைத்துப் பணத்தை மிச்சப்படுத்தச் சொன்ன பண்டிதர். நேரு பண்டிதரே அந்தவழி செல்கையில், சஞ்சீவியாரும் சென்றுல் என்ன?

x x x

திருச்சியில் அவாள் கையிலுள்ள ஒரு உயர்நிலைப் பள்ளியும் கல்லூரியும் உண்டு. திருக்குறளை "சென்சார்" செய்த அமைச்சர் அவினுசியார், அவ்வுயர்நிலைப்பள்ளியில் புதிய கட்டடம் ஒன்று கட்ட அடிப்படைக்கல் நாட்டினுர். அவர் அதை நாட்டி ஏறத்தாழ ஐந்தாண்டுகள் சென்றும் அங்குக் கட்டடம் எழாதிருந்ததை நானே பார்த்தேன். அந்த அமைச்சரிடம் ஏதேனும் மான்யம் வாங்குவதற்காக, அவரைக் கூப்பிட்டு அக்கல்லை நாட்டச் சொல்லினரோ, யாதோ? விழாவால் குளிப்பாட்டி அக்கல்வி அமைச்சரிடம் மானியம் பெற்றபின், அக்கல்லை வேண்டுமென்றே வெய்யிலிலும் மழையிலும் குளிக்கவிட்டு விட்டனரோ என்னவோ? அறியேன்! தெரிந்தவர் எழுதுக!

x x x

கால்கோள் விழா என்றதும் திறப்பு விழா ஒன்று நினைவுக்கு வருகிறது. அண்ணுவும் குறிப்பிட்டார். முன்னர் ஓர் ஊரில் தாழ்த்தப்பட்டோருக்கு வீடுகள் கட்டிமுடித்து அதைத்திறக்க வரும்படி நிதியமைச்சருக்கு அழைப்பு அனுப்பியிருந்தனராம். அவர் அந்தக் குடியிருப்பைத் திறந்து வைத்துக் காங்கிரசின் ஒப்பற்ற சாதனைகளைப் பறைசாற்றப் புறப்படத் தயாராகுகையில், தந்தி ஒன்று வந்தது. "திடீரெனப் பெய்த மழையால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கெனக் கட்டப்பட்ட வீடுகள் அனைத்தும் மழையில் இடிந்துகரைந்து விட்டன. மறுமடியும் வீடுகள் தயாரானதும் அழைக்கிறோம்!" என்றதாம் அத்தந்தி. அமைச்சர் எடுத்துவைத்த பெட்டிபடுக்கையை மூலையில் தூக்கி எறிந்தாரோ? வேறென்ன செய்தாரோ?

x x x

மதுரையில் இப்போதிருக்கும் கல் பாலம் கட்டி முடிக்கப்பட்டு வண்டிகளெல்லாம் போய்வந்து அது பழையதானபின் திறந்து வைக்க வந்திருந்தார் ஒருமந்திரி. அவர் "இந்திராணி மந்திரி!" என்று மட்டும் சொல்லி வைக்கிறேன். பெயரைச் சொன்னுல், அவர் போலீசோடு வந்து கொன்று விடுவார்!!!

—செல்லையா.

முல்லை
மார்ச் இதழ்
வள்ளுவர் நெறி விளக்கம்
தொதவர்களின் பழக்க வழக்கங்கள்
முதலிய கட்டுரைகளோடு
ஆசிரியர் எழுதும்
"இசை பிறந்தது"
என்ற எழுத்தோவியத்துடன் மலர்கிறது.
முல்லை :: சென்னை-6.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணைசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நாடு
தொலைபேசி எண் 83510.